Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

THAMPI links with LIONAIR
Tickets Available For RS. 1999/-
T.P. - Colombo - 01-343125
Jaffna - 021-2222040 / 2823 / 2504
Hotline - 0777-382343, 072-401423

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 27 ஆம் நாள் (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 13

# படுகொலைகளைத் தடுக்காதுவிடில் அது சமாதான முயற்சிகளை பாதிக்கும் !

## - தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுவுக்கு தெரிவிப்பு -

(நமது நிருபர்)



கிழக்கில் நடைபெற்ற அப்பாவித்தமிழ் மக்கள் படுகொலைகளுக்கு விடுதலைப் புலிகள் தமது கண்டனத்தைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் - கிளிநொச்சியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கடிதம் மூலம் இந்தக் கண்டனத்தைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் விசேட அதிரடிப் படையினராலும், துணைப் படையினராலும் மேற்கொள்ளப்பட்டது போன்ற தாக்குதல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் அது சமாதான முயற்சிகளுக்குப் பாதிப்பாக அமைந்து விடுமென்றும் அக்கடிதத்தில் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை சு.ப.தமிழ்ச்செல்வன் கேட்டுள்ளதாகவும் தெரியவருகிறது..

# நயினாதீவு சென்ற போராளிகள் கடற்படையினரால் தடுத்து வைப்பு

நேற்று அரசியல் பணிக்காக நயினாதீவு சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல்துறை உறுப்பினர்கள் கடற்படையினரால் அங்கிருந்து யாழ்ப்பாணம் வரமுடியாது தடுக்கப்பட்டுள்ளனர்.

அரசியல்துறையைச் சேர்ந்த பாப்பா, தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன், நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன் ஆகியோர் நேற்று நயினாதீவிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக நயினாதீவு இறங்குதுறைக்கு வந்தபோது அவர்களை தொடர்ந்தும் செல்லவிடாது கடற்படையினர் தடுத்தனர்.

மீண்டும் நயினாதீவுக்கே சென்ற அவர்கள் அங்கிருந்தவாறே விடயத்தை யாழ்.மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதிக்கு அறிவித்தனர். இது தொடர்பாக இளம்பரிதி போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவுக்கு அறிவித்தார். கண்காணிப்புக் குழுவினர் கடற்படையினருடன் தொடர்பு கொண்டு

(10ஆம் பக்கம் பார்க்க)


### விண்ணாணம் விநாசியர்



சமாதானத்தின்ர ஒளிய யாரும் மங்க விடக்கூடாது பாருங்கோ!

# காஞ்சிரங்குடா எஸ்.ரி.எவ். முகாம் உடன் அகற்றப்பட வேண்டும் !

## - கேணல் கருணா புரூவ் ஹொவ்டேயிடம் வலியுறுத்து -



விசேட அதிரடிப்படையின் நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை சீர்குலைக்கும் நோக்கம் கொண்டவையென மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கான விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் கருணா, இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புரூவ் ஹொவ்டே உடனான சந்திப்பின் போது தெரிவித்தார்.

'எங்களுடைய போராளிகள், எங்கள் மக்கள் ஆகியோர் மத்தியில் தாய்லாந்தில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்கள் நம்பிக்கையை உருவாக்கியிருந்தது. சமாதானப் பேச்சுவார்த்தைகளை சீர்குலைக்கும் நோக்கம் கொண்டவையாக விசேட அதிரடிப்படையின் நடவடிக்கைகள் உள்ளன. எதிர்காலப் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை கொண்டவர்களாக எமது மக்கள் காணப்படுகின்றனர். ஆனால் விசேட அதிரடிப்படையின் அட்டூழி

(10ஆம் பக்கம் பார்க்க)

# தாக்குதல்களுக்குக் காரணமானவர்களை அடையாளம் காட்ட திருமலை மக்கள் தயார்

## - கண்காணிப்பு குழுவிடம் பட்டியல் கையளிப்பு -

(திருமலை)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புரூவ் ஹொவ்டே நேற்றுக் காலை திருகோணமலைக்கு விஜயம் செய்தார். காலை 10.30 மணிக்கு யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.திலக்கைச் சந்தித்து உரையாடினார். இச்சந்திப்பு சுமார் 45 நிமிடங்கள் நீடித்தது.

பின்னர் இச்சந்திப்பு சம்பந்தமாக

(10ஆம் பக்கம் பார்க்க)

## ✲ வீதிகளில் ரயர் போட்டு எரிப்பு ✲ படையினரின் வாகன நடமாட்டம் முடக்கம்

# யாழ். குடாநாடு எங்கிலும் ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு!



கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற படுகொலைகளைக் கண்டித்து நேற்று வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதையடுத்து வட கிழக்கின் அனைத்துப் பகுதிகளும் முழு அளவில் ஸ்தம்பிதம் அடைந்தன.

நேற்றைய ஹர்த்தால் நடவடிக்கையின் போது அனைத்துப் பகுதிகளிலும் உள்ள வெகுஜன அமைப்புக்கள் ஒன்றிணைந்து தமது எதிர்ப்பினையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தின.

வீதிமறிப்புப் போராட்டங்கள், கடையடைப்புக்கள், கண்டனப் பேரணிகள் என்று அனைத்து வகையான எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் மக்கள் ஈடுபட்டனர். இதன் காரணமாக யாழ்ப்பாணம், வன்னிப்பகுதி மற்றும் கிழக்கு மாகாணத்தின் அனேகமான பகுதிகளிலும் வழமையான அனைத்துச் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நேற்றைய தினம் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக அனைத்துப் பொதுச் சேவைகளும் நிறுத்தப்பட்டிருந்தன. யாழ். நகரத்தில் மட்டுமன்றி அனைத்துப் பகுதிகளிலும் ஆங்காங்கே பிரதான வீதிகளிலும், சந்திகளிலும் திரண்ட மக்கள் பல எதிர்ப்பு நட வடிக்கைகளில் ஈடுபட்டனர். வீதிகளின் குறுக்கே தடைகள் போட்டும், ரயர்களைப் போட்டு தீ மூட்டியும் வீதிகளைத் தடை செய்தனர். யாழ். நகரில் கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, ஆகிய பிரதான வீதிகளில் காலை முதலே ரயர்களால் தீ மூட்டி பாதைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. பரமேஸ்வராச் சந்தியிலும் தீ மூட்டி வீதித் தடை போடப்பட்டிருந்தது. இவற்றை விட புறநகர்ப் பகுதிகளான உரும்பிராய்ச் சந்திப் பகுதியின

(9ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்!

சிறிரஞ்சினி இராஜேந்திரம் (யாழ்ப்பாணம்),தங்கவேல் கல்ப்பனா (முல்லைத்தீவு),செல்வராஜா செல்வரஜனி(உடையார்கட்டு),பாலசுப்பிரமணியம் மோகனரஜனி(கனகராயன்குளம்) குமுதினி தியாலிங்கம் (இராமநாதபுரம்),இராமநாதன் பவிதா (புதுக்குடியிருப்பு) நவரத்தினம் சர்மிளா(கிளிநொச்சி),சுதர்சினி பாலசிங்கம்(சண்டிலிப்பாய்),தர்சினி மோகன்(யாழ்ப்பாணம்),கேசினி மணிராஜா(மானிப்பாய்),பிரேமிளா வைகுந்தநாதன்(பருத்தித்துறை), செல்வநாயகம் வசந்தி(கொழும்பு-14),சிவரஞ்சினி குணபாலசிங்கம்(நல்லூர்),ஜோன்மரிய தாஸ் அகஸ்டீன் மலர்விழி(கிளிநொச்சி) பரமநாதசிவம் வராகினி(பரந்தன்), பொன்னுத்துரை உதயரங்கினி (வரணி),மகாலிங்கம் ஜெயக்கவிதா (காங்கேசன்துறை),மாயா ரவீந்திரன் (யாழ்ப்பாணம்), ராஜரத்தினம் தர்மிளா (சுன்னாகம்), சிவம்பிள்ளை அன்ரன் யோபிற்றா (இளவாலை),குணராஜா தர்சினி (யாழ்ப்பாணம்),தர்மராஜா துசாந்தன்(காங்கேசன்துறை),கணேஸ் கலாஜினி(நவாலி),தியாகராஜா கோமதி(கரவெட்டி),கந்தசாமி கலைவாணி(காரைநகர்),ஞானசுந்தரம் கலைவாணி(வட்டுக்கோட்டை),ரட்ணசிங்கம் சிவகுமார்(புதுக்குடியிருப்பு), புவனேஸ்வரசுந்தரம் சுதர்சினி (காரைநகர்), பாலகிருஸ்ணன் யசிதரன் (மீசாலை),சிவலோகலிங்கம் நந்தகுமார்(வட்டுக்கோட்டை),இராசதுரை பாலமுரளி (அல்வாய்), யோகராஜா வேணுகோபன் (ஏழாலை) தர்மலிங்கம் சிறிகரன் (பூநகரி), பரராஜசிங்கம் கஜேந்திரன்(முல்லைத்தீவு),வரதராஜன் ஜெயசிங்கம் (கிளிநொச்சி), தம்பிஜயா வாசுகி (கொக்குவில்), புலேந்திரராஜா அனித்தா (கோண்டாவில்), கோபாலரதினம் இந்திரதாஸன்(பூநகரி), மகேந்திரன் கிருஸ்ணகுமார் (முல்லைத்தீவு), முத்துக்குமாரு கிருஸ்ணரூபி(ஏழாலை), சுப்பிரமணியம் சியாமளா (கோப்பாய்), இராமநாதன் அனுசா(அள வெட்டி), பாலசிங்கம் நிதர்சினி (சுன்னாகம்), சிவலிங்கம்மரியா பத்மதர்சினி (அல்வாய்),சிவரத்தினம் தயாசீலன் (பாண்டிருப்பு),சேபமலை ஜோர்ச் கிரேசியான்(முருங்கன்), ஜோசப் கொன்சியஸ்(கல் முனை),முகமட் எஸ்.எஸ்.நபாய் (ஏறாவூர்), சிவகுருநாதன் இந்துநாதன் (நற்பிட்டிமுனை),சோமசுந்தரம் இளங்கோபன் (சம்மாந்துறை), கதிரவேற்பிள்ளை தினேஸ்(தம்பிலுவில்2) கணேசமூர்த்தி மைதிலி (மட்டக்களப்பு), விஜய சுந்தரம் ராம்நாத்(வவுனியா), தெய்வநாயகம் தயாவதி (பெரியபோரதீவு), கணேசபிள்ளை மதிவதனி (ஆரையம்பதி-3),கணபதிப்பிள்ளை ஜீவாநந்தம் (மட்டக்களப்பு),அட்டுல் வடுட் மூபீன்(வவுனியா), சண்முகம் பிரியதர்சினி (அக்கறைப்பற்று), விநாசித்தம்பி விரோஜினி (கோட்டைக் கல்லாறு),கதிரேசன் நிலாசிவம் (உடப்பு),அமலநாதன் கிசோதர்சன் குறூஸ்(மட்டக்களப்பு), தவபாலன் சுபத்திரா(சித்தாண்டி), சந்திரலிங்கம் சுபானு (கிராண்), சின்னராசா ரதினி(பெரியபோரதீவு), வெற்றிவேல் நித்தியப்பிரியா (களவாஞ்சிக்குடி), சரவணமுத்து சுஜாத்தா(கல்லாறு), கனகரத்தினம் அருணாளினி (மட்டக்களப்பு), தாமோதரன் நடேசமூர்த்தி (மட்டக்களப்பு), சிவஞானசுந்தரம் சிவசவுந்தரேஸ்வரி (முத்தையன்கட்டு), மயில்வாகனம் சுபாசினி (முல்லைத்தீவு), கில்லாரி மரினா (புதுக்குடியிருப்பு), மகாலிங்கம் சுகன்யா (மல்லாவி), அமரசிங்கம் சோபனா (முல்லைத்தீவு), ஆறுமுகம் சீதாரோகினி (வவுனியா), பாக்கியநாதன் அலெக்ஸ் பியாட்(யாழ்ப்பாணம்), சிவாணந்தையன் சுஜீத்தா (உடுப்பிட்டி), பிராங்கிளின் பிரியதர்சினி (இளவாலை), செல்லன் பற்குணநாதன் (தொண்டமனாறு), நல்லதம்பி நிரஞ்சன் (கரணவாய்), முருகையா சுகந்தன் (சங்கானை) இராசரட்ணம் சரவணபவன் (கிளிநெச்சி), மகேஸ்வரன் சுபாஸ் கரன் (சுன்னாகம்), தங்கவேல் நாகரஞ்சினி (காரைதீவு), ஆதம் பாவா அமினாபேகம் (சாய்ந்தமருது) விஜயகுமார் அலன்ஜெனிற்றா (திருகோணமலை), சண்முகப்பிரியா நவரட்ணதாஸ்(திருகோணமலை) நூறுஹக்சிபா (திருகோணமலை), பரமாநந்தன் நந்தினி(கிண்ணியா), மகேந்திரராஜா ஜெயச்சித்திரா(திருகோணமலை), சண்முகம் சசிகலா(கல்முனை), சப்ரியா முக மட்அலி(சம்மாந்துறை), அமரசிங்கம் சுகிர்தா(திருக்கோவில்), யுவாற்றயாஸ்கிரிஸ்டில்லா (மன்னார்) யசிந்தா கோங்கியு(வங்காலை), ஜெ. என். பர்னான்டோ (பேசாலை), கணபதிப்பிள்ளை திரவியகுமார் (தாளையடி), ஒப்ரீ மேவில்சிலாந்தி (திருகோணமலை), சாம்சடுன் யசினா(சாய்ந்தமருது), செந்துஜா ரட்ணசிங்கம்(கோண்டாவில்), யுனைடீன் பஸ்மியா(கிண்ணியா - 3) தொம்ரீன் பஸ்ரினாபேபி (செட்டிகுளம்) யம்டீன்சிறூன் தாச்(மருதமுனை ),எம்.ஆர்.ரசூப்(புத்தளம்) மக்மூத் சிபாரா (கல்பிட்டிய), எம்.எம் ஹமீஸ் (மருதமுனை-3) எம். ஏ.சப்ரீயா (சமாந்துறை), தர்மலிங்கம் குவிந்திரன் (காரைதீவு),அருனையகம் நிரோசாஅனோ ஜீனி(மட்டக்களப்பு), முஸ்தப்பா லெபிரிஸ்னா(சாய்ந்தமருது-10),கொன் சலிற்றா அந்தோனிப்பிள்ளை(மன்னார்), விஜயா கனகசபை(கல்முனை), திருமால் முத்துலக்ஸ்மி(தலைமன்னார்), என்அமலலோஜினி(மூதூர்),காத்தமுத்து தேவரஞ்சன்(காரைக்குடா), அம்பத்தரசு நந்தினி(முல்லைத்தீவு), ஜெயசூரியா நிசாந்தினி (லிங்கநகர்),சர்மினி மார்க்கண்டு (ஊர்காவற்துறை), நமசிவாயம் ராதிகா (முள்ளியவளை), ஜெயந்தி சிவஞானம்(அச்சுவேலி), நவரட்ணராஜா மெரின் நிலானி(யாழ்ப்பாணம்), யோகராஜா சுபர்னா(மட்டக்களப்பு), பிரசாந்தினி செல்வராசா(கல்முனை), பிரியதர்சினி ஜெயசுந்தரம் (சம்மாந்துறை), விஜயச்சிரத்திரா விநாயகமூர்த்தி(தம்பிலுவில்-2), இளைமதி ராஜேஸ்வரன்(சுன்னாகம்), தர்சினி சிவராசா(தெல்லிப்பளை), மிருசாயினி தேவராஜா(அச்சுவேலி), சிவஞானம் ஸ்ரீஜெகநாதன்(சண்டிலிப்பாய்), அருமைநாயகம் ரெஜிடனியலா (சுன்னாகம்), சுதா புவனேந்திரன் (பருத்தித்துறை), வதனலக்ஷ்மி ஆனந்தசுந்தரம்(யாழ்ப்பாணம்), காயத்திரி கணேசன்(அக்கரைப்பற்று), வினோதினி சின்னராசா (மூதூர்), ஜனந்தினி சபாரட்ணம் (செட்டிபாளயம்), சர்மிளா காசிலிங்கம்(கொக்குவில்), நாகரட்ணம் நிரஞ்சினி(மூதூர்), அனற் சுதாகரி (வவுனியா), கௌசிகா தர்மராஜா (கோண்டாவில்), றஜித்தா ராஜநாயகம்(வட்டுக்கோட்டை), மரியநாயகம் தனசீலா(சுண்டிக்குளி), மொகமட் அபுபக்கர் ஜெப்ரீயா(ஏறாவூர்-7), மாலதி மகேந்திரன் (தம்பிலுவில்), பேரின்பநாதன் தேன்மொழி (யாழ்ப்பாணம்),அம்பிகை அருமை நாயகம (தெல்லிப்பளை), கவிதா செல்வராஜா(பெரியநீலாவணை-18), தர்மலிங்கம் பவ மணி(சித்தாண்டி), யசோதா தர்மலிங்கம் (புதுக்குடியிருப்பு)யசோதா குகதாசன் (வல்வெட்டித்துறை), ராமநாதன் ரதிக்குமாரி (காரைதீவு-10),தற்பரநாதன் சிவரூபன்(நீர்வேலி), துரைசிங்கம் சசிகரன்(அரியாலை), தாமோதரம் ஜெகன் (அக்கரைப்பற்று), தியாகராஜா பிரசாந் (பல்லவ ராயன் கட்டு), கனகரட்ணம் தெய்வீகன்(ஆனைக்கோட்டை), சம்சூர் ஜெயராஜ் (அடம்பன்) பெரியதம்பி ரஞ்சன்(கல்முனை), சிவரத்தினம் விவேகானந்த மூர்த்தி(காரைதீவு), செல்வநாயகம் நந்தீஸ்வரன் (லிங்கநகர்), கம்டுன் மரிக்கார் நிம்சான் முகமட்(கற்பிட்டி), முரு கேசு இளவேந்தன்(எருவில்), சம்சு லெப்பை சுஸ்வம்(நுரைச்சோலை), கோணநாயகம் அசிரியரி(கல்முனை), அத்தோனிப் பிள்ளை கொன்சலிற்றா(மன்னார்),வெரிச்சோபர் அன்னமேரி ஜெசித்தா கொன்சி (வங்காலை) மொகமட் ராசீக் ராசீவா (புத்தளம்), அப்துல் சலாம் நூறு குஸ்யா(திருகோணமலை) சுந்தரலிங்கம் சுபானோ (கிரான்), விஸ்வலிங்கம் மஞ்சுளா(அண்ணாமலை), யேசுராஜா நிசாந்தினி (லிங்கநகர்).

## உல்லாசப் பயணிகளுக்கு கந்தரோடையில் சிரமம்

(மானிப்பாய்)

கந்தரோடைக்கு புராதன சின்னங்களைப் பார்வையிட வரும் தெனனிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் இடவசதி, சுகாதார வசதியின்றி அவதிப்படுகின்றனர். தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் இவர்கள் மிகவும் நெருக்கடிக்குள்ளாகின்றனர்.

கந்தரோடை தொல்பொருள் பகுதிக்குச் செல்லும் பாதைகள் செப்பனிடப்படாத நிலையில் காணப்படுவதுடன் பஸ் மற்றும் போக்குவரத்து வண்டிகள் பயணம் செய்யமுடியாத நிலையில் வீதியின் இருமருங்கிலும் மரங்கள் அடர்த்தியாகவும் காணப்படுகின்றன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க கந்தரோடை பௌத்த விகாரைகள், மற்றும் வழுக்கியாறு என்பவற்றைப் பார்வையிட தினமும் நூற்றுக் கணக்கான உல்லாசப் பயணிகள் கந்தரோடைக்கு வருகின்றனர். இப்பகுதியை தொல்பொருள் திணைக்களம் பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (42)

## அதிகாரிகள் அசமந்தம் பாலம் சீரற்ற நிலையில்

15 வருடங்களாகப் பாழடைந்துள்ள மருதங்கேணிப் பாலம் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இப்பாலம் திருத்தப்படவில்லை. இதனால் மாரி காலப் பயணம் கேள்விக்குறியாகிள்ளது. இதனால் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## விவசாய நெறிமாணவர் கல்விச் சுற்றுலா

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விவசாய நெறி மாணவர்களது கல்விச் சுற்றுலா நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகி தொடந்து 10 நாட்கள் இடம் பெறும்.

மேற்படி சுற்றுலாவில் விவசாய நெறி முதலாம், இரண்டாம் வருட மாணவர்கள் கலந்து கொள்வார்கள். இவர்கள் நாடு முழுவதிலும் உள்ள விவசாயப் பயிற்சி நிலையங்கள், விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் விவசாயத் தோட்டங்களுக்கு விஜயம் மேற்கொள்வர்.

இவர்களுக்கு அங்கு செய்முறைப் பயிற்சிகளும் கருத்தரங்குகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

### பேச்சுகளின் விபரங்களை உடனுக்குடன்

## ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்த பிரதமர் ரணில் இணக்கம்

தாய்லாந்தில் அரசு - புலிகள் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க முன்னரும் பின்னரும் ஜனாதிபதியைச் சந்தித்து இது தொடர்பாகக் கலந்தாலோசிப்பது என நேற்றைய ஜனாதிபதி - பிரதமர் சந்திப்பில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க ஜனாதிபதியை, ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேசிய போதே இம்முடிவு எடுக்கப்பட்டது. இம்மாத இறுதியில் ஆரம்பிக்கவுள்ள அரசு - புலிகள் இரண்டாம் கட்டப் பேச்சுக்களுக்கு முன் பிரதமர் ஜனாதிபதியைச் சந்தித்து நிலைமைகளை விபரிப்பார் எனவும் பின்னர் பேச்சுக்கள் முடிவடைந்ததும் அது பற்றிய விபரங்களையும் ஜனாதிபதியைச் சந்தித்து விபரிப்பார் எனவும் தெரியவருகிறது.

## 98இல் கைதானவர் நீதிமன்றினால் விடுதலை

(கொழும்பு)

1998 இல் மருதானையில் கைதான செல்வராசா பஞ்சநாதன் என்பவர் கொழும்பு உயர் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிரான வழக்கை சட்ட மா அதிபர் விலக்கிக் கொண்டதையடுத்து நீதிவான் அவரை விடுவித்தார். புலிகளுக்கு நிதி உதவி செய்தமை, படையினருக்குத் தகவல் கொடுக்கத்தவறியமை என்பவையே இவர் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளாகும்.

# விளையாட்டு

## மும்பாய் கிரிக்கெட் டெஸ்ட்டில் இந்தியா இன்னிங்ஸ் வெற்றி

(மும்பாய்)




வீரேந்தர் சேவாக்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இந்திய அணிக்கும் இடையில் மும்பாயில் நடந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 457 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கட்டுக்களையும் இழந்திருந்தது. இந்திய வீரர் வீரேந்தர் சேவாக் 147 ஓட்டங்களையும் ராகுல் ட்ராவிட் 100 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 157 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கட்டுக்களையும் இழந்தது. இதனால் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி நேற்று நான்காவது நாளில் 188 ஓட்டங்களைப் பெற்று சகல ஆடடக்காரர்களையும் இழந்தது.



ராகுல் ட்ராவிட்

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணியுடனான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போடடியில் இந்திய் அணி 1 இன்னிங்ஸ் மற்றும் 112 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்திய அணி சார்பில் 147 ஓட்டங்களைப் பெற்ற வீரேந்தர் சேவாக் ஆட்டநாயகனாக அறிவிக்கப்பட்டார்.

## சார்ஜா டெஸ்ட் கிரிக்கெட் பாகிஸ்தான் படுதோல்வி

(சார்ஜா)

அவுஸ்ரேலியா - பாகிஸ்தான் அணிகளிடையே நடந்த சார்ஜா டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா அணி ஒரு இன்னிங்ஸ் 198 ஓட்டங்களால் பாகிஸ்தானை தோற்கடித்தது.

ஐந்து நாள் போட்டியில் இரண்டாம் நாள் ஆட்டம் முடிவடைய முன்பே அவுஸ்ரேலியா இப்பெரு வெற்றியை பெற்றது.

முதல் இன்னிங்ஸில் 59 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்த பாகிஸ்தான் இரண்டாவது இன்னிங்ஸில் 53 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது. இதுவே பாகிஸ்தான் ஒரு இனிங்சில் பெற்ற மிகக் குறைந்த ஓட்டங்களாகும்.



பந்து வீச்சில் ஷேன்வோன் 11 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களையும மெக்ராத் 10 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் பிரட் லீ 15 ஓட்டங்களுக்கு2 விக்கட்டுக்களையும் கைப்பிற்றினா்.

அவுஸ்ரேலியா முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கட் இழப்பிற்கு 310 ஓட்டங்களைப் பெற்றது.

## ஹொக்கிப் போட்டியில் கொரியாவுக்கு தங்கம்!

(புசான்)

தென்கொரியாவில் நடைபெற்று வரும் ஆசிய மெய்வல்லுனர் போட்டியில் நேற்று நடந்த ஹொக்கி போட்டியில் தென் கொரிய அணி தங்கத்தை வென்றுள்ளது.

இந்திய அணியுடன் நடந்த இறுதியாட்டத்தில் 4-3 என்ற கோல் அடிப்படையில் தென்கொரிய அணி வெற்றி பெற்றது.

தங்கப் பதக்கத்தை வெல்லும் என எதிர்பார்க்கப்பட்ட இந்திய அணி வெள்ளிப் பதக்கத்தையே பெற்றது. மூன்றாவது இடத்தைப் பெற்ற மலேசிய அணி வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது.

# புன்னாலைக்கட்டுவனில் சிறைச்சாலை புதிதாக அமைப்பதற்கு நடவடிக்கை!

## பூர்வாங்க வேலைகள் ஜனவரியில் ஆரம்பம்!

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக மூன்று வீடுகளில் இயங்கிவரும் சிறைச்சாலையில் 120 கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆண்களுக்கான சிறைச்சாலைப் பகுதியில் பத்து இராணுவத்தினர் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இருபது நபர்கள் உட்பட மொத்தமாக 105 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பெண்களுக்கான சிறைச்சாலைப் பகுதியில் மூன்று பெண் இராணுவத்தினர் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இரு பெண்கள் உட்பட மொத்தமாக 15 நபர்கள் உள்ளனர்.

இக்கைதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிகமாக இயங்கி வரும் சிறைச்சாலையில் பாரிய இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கு தீர்வு காணும் நோக்கில் புன்னாலைக்கட்டுவனில் நிரந்தரமாக சிறைகூடத்தினை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் எதிர்வரும் தை மாதம் ஆரம்பமாகும் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

### சட்ட விரோத மதுபான சாலைகள் மீது நடவடிக்கை

குடாநாட்டில் பரவலாகக் காணப்பட்ட சட்டவிரோத மதுபானச் சாலைகளை மூடும் முயற்சியில் மதுவரித் திணைக்களம் முனைப்புடன் செயற்பட்டுவருகின்றது. கடந்த சில வருடங்களாக இடம்பெற்ற பல குற்றச் செயல்களிற்கு இவையே காரணமாக இருந்தன. தற்போதுள்ள சுமூக நிலையில் சட்டவிரோத மதுபானச் சாலைகள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது. (111)

# யாழ். வீதி விபத்துக்களில் ஒரே நாளில் ஐந்து பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பல்வேறு விபத்துச் சம்பவங்களின்போது 5 பேர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி விபத்துக்களில் படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்க்ப்பட்டவர்களில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பத்திரிகையாளர் இ.சிறிஸ்கந்தராஜா, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ரி.சுதாகுமார்(26), கரவெட்டியைச் சேர்ந்த எஸ்.ஜெயராதன் (41) கோண்டாவிலைச் சேர்ந்த பி.இரட்ணசிங்கம்(40), யாழ்ப்பாணத்தைச் சோந்த எம்.பரமானந்தம் (20) ஆகியவர்களே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.

# உலக வங்கி உதவினாலேயே ஆசிரிய பற்றாக்குறை நீங்குமாம்

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்தும் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உதவி வழங்கும்படி உலக வங்கியிடம் கோரப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக வட-கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த உலக வங்கி அதிகாரிகள் மாகாணக்கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது இவ்விடயம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

வெற்றிடங்களை நிரப்புவதாயின் நாட்டின் அனைத்துப் பகுதியினதும் மொத்தமான ஆளணி எண்ணிக்கையில் அதிகரிப்புச் செய்யவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கமைய புதிய ஆளணியை ஏற்படுத்துவதன் மூலம் அதன் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கும், மேலும் க.பொ.த. உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும் நியமனம் வழங்கு வதற்காக ஆயிரம் பேருக்குமாக மொத்தம் மூவாயிரம் ஆசிரியர் களுக்கான புதிய ஆளணிக்கு அனுமதி பெறப்பட்டது. எனினும் இதுவரை 750 பேருக்கு மட்டுமே பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதன்படி இன்னமும் இரண்டாயிரத்து இருநூற்றிஐம்பது ஆசிரியர்களுக்கான ஆளணி இன்னமும் நிரப்பப்படாமல் உள்ளது. இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறைசேரியிலும் நிதி இல்லை என்ற காரணத்தால் புதிய நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் இதைத்தான் தற்போது ஆசிரிய நியமனத்திற்கு நிதிஉதவி வழங்கும்படி உலகவங்கியிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (க)

# ரத்வத்தவின் வைப்புப் பெட்டகங்கள் வங்கிகளிடமிருந்து அறிக்கை இல்லை

ரத்வத்தவின் வைப்புப் பெட்டகங்கள் தொடர்பான அறிக்கைகளை எந்தவொரு வங்கியும் சமர்ப்பிக்கவில்லை என்கிறது லஞ்ச ஊழல் ஆணைக்குழு.

ஆறு வங்கிகளில் எந்தவொரு வங்கியும் அனுருத்த ரத்வத்தையின் வைப்புப் பெட்டகங்கள் தொடர்பான அறிக்கையை இதுவரையில் சமர்ப்பிக்கவில்லை என லஞ்ச ஊழல் ஆணைக்குழு அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது.

அனுருத்த ரத்வத்தையின் வங்கிப் பெட்டகங்களில் இருந்து சுமார் ஐநூறு கோடி ரூபா பெறுமதியுடைய வைப்புச் சான்றிதழ்கள் மீட்கப்பட்டன. இது தொடர்பாக ஆராய்வதற்காக சம்மந்தப்பட்ட ஆறு வங்கிகளிடமும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தாகவும் எந்தவொரு வங்கியும் அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை என்றும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

இவர்கள் அறிக்கை சமர்ப்பிக்காததன் காரணத்தினால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளதாகவும் அரசாங்கத்திடம ஆணைக்குழு சுட்டிக்காட்டியுயள்ளது.

## இராமநாதன் நினைவுப் பேருரை

யாழ். பல்கலைக்கழகத்தால் வருடந்தோறும் நடாத்தப்படும் சேர். பொன்.இராமநாதன் நினைவுப் பேருரை, 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. துணைவேந்தர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை உயர் நீதிமன்ற நீதிபதி சி.வி.விக்கினேஸ்வரன் "நடைமுறையும் நோக்கும்" என்ற பொருளில் நிகழ்த்தவுள்ளார். (111)

## மனித உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை


(இயற்றாலை)

மீசாலை புத்தூர் சந்திக்கும் வேம்பிராய் சந்திக்கும் இடையேயுள்ள மக்கள் அப்பகுதி வீடுகளில் தங்கியிருக்கும் படையினரை வெளியேற்றி விட்டு தமது சொந்த வீடுகளில் மீளக்குடியமர வசதி செய்து தருமாறு மனித உரிமைகள் செயலகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (35)


# யாழ். உயர்நீதிமன்றம் ஐவரை விடுவித்தது

பயங்கரவாதச்சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்ட ஐந்து பேரை யாழ். உயர் நீதிமன்றம் விடுவித்துள்ளது. இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை சட்டமா அதிபர் திணைக்களம் வாபஸ் பெற்றுக் கொண்டதையடுத்து யாழ்.உயர்நீதி மன்றம் இவர்களை விடுவித்தது.



நேற்று வெறிச்சோடிய யாழ். நகரப் பகுதிகள்




# பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தலில் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் வெற்றி!

## முஷாரவ்வின் இலக்கு கடினமானதே!!

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 6 இஸ்லாமியக் கட்சிகள் இணைந்து உருவாகியிருந்த கூட்டணி எதிர்பாராத அளவு வெற்றிகளை ஈட்டியுள்ளது.



இக்கூட்டணி இஸ்லாமிய அடிப்படைவாதத்தைக் கொண்டதாகும். அத்துடன் தலிபானுக்கும் ஆதரவானதாகும்.

எந்தத் தனிக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறத் தவறிவிட்டது. அதன்காரணமாக பாகிஸ்தானில் ஒரு தொங்கு பாராளுமன்றமே அமையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி, இஸ்லாமியக் கட்சிகளின் கூட்டமைப்பு, தலிபானுக்கு ஆதரவு தெரிவிக்கும் பழங்குடி மக்களின் கட்சிகள் என்பன ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டரசாங்கத்தை அமைக்கும் சாத்தியங்கள் உள்ளன.

எனினும் இவ்விடயத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதி இடையூறுகளை மேற்கொண்டு குழப்புவார் என பூட்டோ அச்சம் தெரிவித்தார்.

முஷாரவ் ஆதரவுக் கட்சி மற்றைய கட்சிகளை விட சில ஆசனங்கள் அதிகமாகப் பெற்றுக்கொண்டிருப்பினும் அவரது ஆதரவாளர்களால் தனித்து ஆட்சி அமைக்கமுடியாத நிலை உள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகள் குறிப்பிடத்தக்களவு வெற்றியீட்டியுள்ளமை, பாகிஸ்தான் மக்களிடம் காணப்படுகின்ற அமெரிக்க எதிர்ப்பு உணர்வலைகளின் வெளிப்பாடாகவே உள்ளது.

உலகவலம்

## தீவிர இந்துவாதிகள் பி.ஜே.பி. மீது குறைகூறல்

(டெல்லி)
விஷ்வ ஹிந்து பரிசத், ஆர்.எஸ்.எஸ். ஆகிய இந்துவாத அமைப்புக்கள் பாரதிய ஜனதாக்கட்சி ஆட்சியைக் குறை கூறியுள்ளன. இந்து தீவரவாத சிந்தனையுள்ளவர்கள் ஏறத்தாழ நூறுபேர் லோக்சபாவில் உள்ளனர். அவர்களுக்கு ஊடாக இக் கோரிக்கைகள் வலுப் பெற்றால் வாஜ்பாய் அரசாங்கத்துக்கு நெருக்கடிகள் தோன்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## வெனிசுவெலாவில் ஆர்ப்பாட்டம்


(லண்டன்)
வெனிசுவெலா ஜனாதிபதியை பதவி விலகக் கோரி பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி அங்கு நடந்துள்ளது

## சமாதானத்துக்கான நோபல் பரிசு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிக்கு!

(லண்டன்)
இவ்வாண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டருக்கு வழங்கப்பட்டுள்ளது.

65 நாடுகளில் போர், வறுமை, நோய் ஆகியவற்றுக்கு எதிராகப் போராடிய மக்களுக்காக இவர் அரசியல் ரீதியாகப் பாடுபாட்டவர் என்றும், இவர் கெடுபிடிப்போர் (**Cold war**) நிலவிய காலத்தில் பதவிவகித்த அமெரிக்க ஜனாதிபதிகளுள் ஒப்பீட்டளவில் நியாயமாக நடந்தவர் என்றும் கூறப்படுகிறது.

கியூப ஜனாதிபதி பிடெல் காஸ்ரோவும் சிலவேளைகளில் இவரைப் பாராட்டியுள்ளார்.



ஜிம்மி காட்டருடன் பிடெல் காஸ்ரோ



முன்னாள் தலைவர்களுக்கு மத்தியில் நோபல் பரிசுபெறும் ஜிம்மி காட்டர்

## ஐவரிக்கோஸ்ட் சண்டையினால் பெரும் மனிதாபிமான நெருக்கடி!

(நியூயோர்க்)
தீவிரவாதிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் ஐவரிக்கோஸ்ட்டில் தொடர்ந்து இடம்பெறும் சண்டை காரணமாக பெரும் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக ஐ.நா.வின் உலக உணவுத்திட்டம் அறிவித்துள்ளது.

மேற்கு ஐவரிக்கோஸ்ட் போக்கே நகரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்காலிக போர்நிறுத்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே இவ்விடயங்களைக் கவனிக்கக்கூடிய நிலைமையும் தீர்வுகளை அமுல்படுத்தக் கூடிய நிலைமையும் தோன்றும் என்று சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் தெரிவித்தன.

அத்துடன் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் மீண்டும் மத்தியஸ்த்த முயற்சிகளில் இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஈராக் மீதான அமெ. தாக்குதலுக்கு காங்கிரஸ் முறைப்படி அங்கீகாரம்!

(வோஷிங்டன்)
ஈராக் மீதான இராணுவ நடவடிக்கை எடுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் தீர்மான வரைவுக்கு அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகளின் பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது. வாக்கெடுப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் எதிர்த்து வாக்களித்திருந்தாலும் வரைவுக்குப் பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது.

எப்பொழுது இராஜதந்திர நடவடிக்கைகள் பயனற்றுப் போகிறதோ அப்போதுதான் இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று செனற் சபை கருதுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. இத்தீர்மான வரைபுக்கு இனி மேல்தான் செனட் அங்கீகாரம் கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்வரைவுக்கு எதிர்த்து வாக்களித்த காங்கிரஸ் பெண் அங்கத்தவர், அரபு உலகிலும் சர்வதேசத்திலும் ஆதரவைக் கட்டியெழுப்பிய பின்பே இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தார். அமெரிக்க மக்கள் ஒரு தலைப்பட்ச இராணுவத் தாக்குதலை ஏற்கவில்லை என்றும் அவர் கூறினார்.


## அமெரிக்காவில் சினைப்பர் தாக்குதல் நகரங்களில் மக்கள் பதற்றம்!

(வோஷிங்டன்)
சினைப்பர் தாக்குதல் செய்யும் ஒரு தனிநபர் அல்லது குழுவொன்று அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனிலும் வேர்ஜீனியாவிலும் தனது கைவரிசையைக் காட்டி எட்டுப் பேரைக் கொன்றுள்ளது.

இது பற்றி அமெரிக்கப் பொலிஸார் துரித விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறான சினைப்பர் துப்பாக்கித் தாக்குதல்கள் அமெரிக்க நகரங்களில் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் பதட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

எட்டாவதாக நடந்த சினைப்பர் தாக்குதல் வேர்ஜீனாவில் உள்ள பெற்றோல் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.




சினைப்பரின் எதிரொலி அமெ. பொலிஸார் தேடுதல்.




## நியூயோர்க்கில் குற்றச்செயல்களை மாநகர முதல்வர் குறைத்துள்ளார்

(நியூயோர்க்)
நியூயோர்கின் மாநகர முதல்வர் யூலியானி தனது மாநகருள் குற்றச் செயல்கள் மூன்றில் இரண்டு பங்கால் குறைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

இது வரை குற்றச் செயல்கள் நிறைந்த நதரங்களுள் ஒன்றாக நியூயோர்க் திகழ்ந்தது மெக்சிக்கோ உலகிலேயே குற்றச் செயல்கள் அதிகமாக இடம்பெறும் நகரமாக வுள்ளது.

## அமெரி. தூதரகங்கள் உஷார் நிலையில்!


(வோஷிங்டன்)
அல்கெய்டா எச்சரிக்கை விடுத்ததையடுத்து அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு, உலகெங்குமுள்ள அமெரிக்க தூதுவராலயங்களுக்கு, அல்கெய்டா தாக்குதல் நடத்தக்கூடும் என்றும் அதனைத் தடுக்கும் வகையில் கவனத்துடன் செயற்படுமாறும் அறிவித்துள்ளது.

## அமெரிக்க – பிரிட்டிஷ் விமானங்கள் தாக்குதல்

அமெரிக்க - பிரிட்டிஷ் யுத்த விமானங்கள் கூட்டாக இணைந்து ஈராக்கின் ஏவுகணைத் தளம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

தமது ஆயுதக் களஞ்சியங்களை பரிசோதனை செய்வதற்கு ஐக்கிய நாடுகள் ஆயுதப்பரிசோதகர்களை ஈராக் அனுமதிப்பதாக இணக்கம் தெரிவித்த பின் 122 முறை தாக்குதல் நடத்தியிருப்பதாகவும் அதனை அடுத்து இந்தத் தாக்குதலை அமெரிக்க - பிரிட்டிஷ் யுத்த விமானங்கள் கூட்டாக நடத்தியுள்ளன என்றும் பெண்டகன் தெரிவித்துள்ளது.

# விளம்பரங்களின் அத்துமீறல்












- நிர்மலன் -



ஐ.சீ.சீ. கிரிக்கெட் ஆட்டங்களைத் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த ஒரு ரசிகர் "இன்னும் சிறிது காலத்தில் கிரிக்கெட் ஆட்டங்களுக்கு இடையில் விளம்பரங்கள் காட்டுவது நிறுத்தப்பட்டு, விளம்பரங்கள் எனும் நிகழ்ச்சிக்கிடையில் கொஞ்சம், கொஞ்சம் கிரிக்கெட் காட்டுவார்கள்" என்றார். தொடர்ச்சியாகவே விளம்பரங்கள் கிரிக்கெட் ஆட்டங்களை ஓரம்கட்ட முனைவது என்பது ரசிகர்கள் அவதானித்து வரும் ஒன்றுதான். ஆனால் இம்முறை அது அளவுக்கதிகமாகவே கூடிவிட்டது. இது தொடர்பில் பல தரப்பிலும் இருந்து அதிருப்திக் குரல்கள் எழுப்பப்படுகின்றன. ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தினர் இது தொடர்பில் தமக்கு நிறையவே கண்டனக் கடிதங்களும் வந்துள்ளன என்றனர்.

கிரிக்கெட் ரசிகர்களை விளம்பரங்கள் ஒளிபரப்பப்படும் முறை எரிச்சலூட்டுவது பல வகைகளில் அமைந்திருந்தது. ஆட்டக்காரர் ஆட்டம் இழந்ததும் இழக்காததுமாக விளம்பரம் தோன்றுதல், சிலவேளை புதிய ஓவர் ஆரம்பித்து ஒரு பந்து வீச்சு முடிவடைந்ததும் ஆட்டத்தைக் காண்பித்தல் (சிலவேளைகளில் அந்தப்பந்து வீச்சில் வீரர் ஆட்டமிழந்தும் இருக்கலாம்). ஒரு அருமையான காட்ச் பிடித்து வீரர்களின் உற்சாகத்தையும் பார்க்க எண்ணும்போது ஒரு வீரர் தளர்வடைந்து அல்லது காயப்பட்டு மைதானத்தில் அவஸ்தைப்படும்போது, (அவரின் ஆட்டத்திறமையை ரசிப்பவர்கள் அவரின் துன்பத்தில் பங்கு கொள்ளக்கூடாதா?) இப்படியாக அடுக்கிக் கொண்டே போகலாம். வாசகர்கள் இன்னும் நிறையவே சந்தர்ப்பங்களை நினைவுகூர முடிந்தவர்களாக இருப்பார்கள்.

இன்னொன்று **scrollads** இவை தொலைக்காட்சிப் பெட்டியின் கீழ்ப் பகுதியில் மெதுவாக அசைந்து கொண்டிருக்கும் அப்பகுதியிலேயே வீரர்களின் துடுப்பாட்ட, பந்து வீச்சு சராசரிகள் மற்றும் பல விபரங்கள் தரப்படுவது வழக்கம். ஒரு ரசிகர் இவற்றை கட்டாயம் அவதானித்து பல முடிவுகளை மேற்கொள்வர். ஆனால் அங்கும் விளம்பரங்களின் ஆதிக்கம். அதனை அவதானித்து விளம்பரங்களை அகற்றினாலும் கூட எரிச்சலூட்டும் விளம்பரமாகவே அமைகின்றன. இன்னொரு வகை **logos** இவை எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி மைதானத்தில் ஓடித் திரிகின்றன. சிலவேளை பந்து வீச்சுக்குக் குறுக்கே சென்று **lbw** முறையில் திரையை விட்டு அவுட்டாக்க வேண்டிய கட்டாய நிலையும் உண்டு.









கிரிக்கெட் ஆட்டத்தை எந்தளவு ஆர்வத்துடன் பார்க்கின்றோமோ, அந்தளவு ஆர்வத்துடன் விளம்பரங்களையும் பார்க்கவேண்டும். விளம்பரங்கள் இல்லாமல் கிரிக்கெட் ஆட்டங்கள் நடத்த முடியாதென்பது உண்மைதான். ஆனால் ஏறத்தாழ ஏழு மணித்தியால இடைவெளியில் ஒரே விளம்பரம் பல தடைவைகள் வருவதும் ஒரு சலிப்புத்தான். பத்திரிகையாளர் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போது பதிலளித்த ரசிகர் விளம்பர இடைவெளியில்தானே நாங்கள் ரீ குடிக்கவோ, சமையலறைக்கோ, எம்மை இலகுபடுத்திக்கொள்ள பின்புறமோ ஓடுகிறோம். யார் விளம்பரங்களை பார்க்கிறார்கள் என்கிறார். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ரசிகர் குறிப்பிட்டவிளம்பரத்தை பார்க்க வைக்க வேண்டும் என்றுதான் பல முறை ஒளிபரப்புகிறார்களோ?

தொலைக்காட்சி நிறுவனங்கள் இது தொடர்பில் அதிருப்திகளை உணர்ந்திருப்பதாகவே தோன்றுகிறது. தாங்கள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தும்கூட தவிர்க்க முடியாதபடி ரசிகர்களின் உற்சாகத்திற்குக் குறுக்கே நிற்கவேண்டி ஏற்பட்டு விடுகிறது. என்று வருந்துகிறார்கள்.

மேலும், விளம்பரதாரர்கள் பெருந்தொகைப் பணத்தையும் அதில் முதலீடு செய்கிறார்கள் என்பதையும் மனங்கொள்ள வேண்டும். உதாரணத்திற்குச் சில ஐ.சீ.சீ. போட்டிகளில் இலங்கை விளையாடும் ஆட்டங்களுக்கு முப்பது செக்கன்களுக்கு ஐம்பதினாயிரம் ரூபாவும், அரையிறுதி ஆட்டங்களுக்கு முப்பது செக்கன்களுக்கு ஐம்பத்தையாயிரம் ரூபாவும், இறுதி ஆட்டத்திற்கு முப்பது செக்கன்களுக்கு அறுபதினாயிரம் ரூபாய்களும் விளம்பரங்களுக்காக அறவிடப்பட்டன. எனவே போட்டி வர்த்தக உலகத்தில் விளம்பரங்கள் முந்திக்கொள்ள முனைவதில் ஆச்சரியம் இல்லைதான்.

விளம்பரங்கள் ரசிக்கக்கூடியவையாகவே அமைந்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. சிறுவர் முதல் பெரியோர் வரை ரசித்துச் சிரிக்கிறார்கள் அவற்றை மனங்கொள்கிறார்கள் வியாபாரமும் அதிகரிக்கும் என்பது உண்மைதான். ஆனால் எதிர்வரும் காலங்களில் கிரிக்கெட் ஆட்டங்களுடன் சேர்ந்து விளம்பரங்களையும் ரசிக்கும் தன்யைச் சம்பந்தப்பட்டோர் ரசிகர்களுக்கு ஏற்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். நிறையவே கண்டனங்கள் எழுந்துள்ளதால் 2003 உலகக்கோப்பை கிரிக்கட் போட்டிகள் மிகவே நெருங்கிவிட்டதால் இது தொடர்பில் சம்பந்தப்பட்டோர் எல்லோரும் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்பது கிரிக்கெட் ரசிகர்களின் பேரவாவாகும். ☆




# மீண்டும் ஓர் அணித்தெரிவா?

தென்னாபிரிக்காவிற்குச் செல்லத் தெரிவு செய்யப்பட்ட இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு அங்கீகார அனுமதியளிக்க விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ரன் பெர்னான்டோ மறுத்திருக்கிறார். அணித் தெரிவில் தன் கருத்து எதுவும் பெறப்படவில்லை என்று இலங்கை அணித் தலைவர் சனத் ஜயசூரிய தன் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து, தான் இந்நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் கூறுகின்றார். ஆனால் தேர்வுக் குழுத் தலைவர் ஹோய் டீ அல்விஸ் கருத்துக்கூறும் போது - சனத்தும் பயிற்றுநர் டேவ் வட்மோரும் அங்கு பிரசன்னமாயிருந்ததாகவும் கூறுகின்றார். அவ்வேளையில் மறுப்பு எதுவும் தெரிவிக்காத சனத் தற்போதுமட்டும் அதிருப்தி தெரிவிப்பது தனக்கு ஆச்சரியமாக இருக்கின்ற தென்றார்.



இம்முறை தெரிவுசெய்யப்பட்டுள்ள அணியில் மூன்று புதிய இளைஞர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். சகலதுறை ஆட்டக்காரர் ஹசந்த பெர்னான்டோ, வேகப்பந்து வீச்சாளர்கள் திலின துஷார, தசங்க லக்சித ஆகியோரே அவர்கள். இவர்களுள் ஹசந்த பெர்னான்டோ 4 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் மட்டும் ஆடியவர். மற்றையோருக்கு அதுவும் இல்லை. மேலும் ஜெகான் முபாரக், சாமில கமகே ஆகியோர் தலா ஒரு டெஸ்ட் போட்டியிலும் சுஜீவ டீ சில்வா இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் மட்டும் ஆடியவர்கள். இந்நிலையில் இளம் வீரர்களை அணியில் சேர்த்துக்கொள்வது என்ற கொள்கையின் அடிப்படையில் இத்தெரிவுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்வாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் தென்னாபிரிக்கா போன்ற பலமிக்க ஒரு அணியுடன் அதுவும் அவர்கள் நாட்டிலேயே விளை[illegible]ம் போது அரைவாசி அளவில் புதிய வீரர்களு[illegible]ளமிறங்க முயற்சிப்பது விஷப்பரீட்சையாகப் போய்விடும் என்று சனத் கவலைப்பட்டிருக்கக்கூடும். மேலும் இவர்களைவிட அனுபவம் வாய்ந்த இளம் வீரர்கள் சிலர் இந்த அணியில் சேர்த்துக் கொள்ளப்படக்கூடும் என்றும் சனத் எதிர்பார்த்திருக்கவும் கூடும். எது எவ்வாறாயினும் இறுதி அணித் தேர்வும் அங்கீகாரம் பெறுதலும் விரைவிலேயே நிறைவேறும் என்று எதிர்பார்க்கலாம்.

- பிரகாசன் -

# தளராத தன்னம்பிக்கை



ஆப்கானிஸ்தான் யுத்தத்தால் அழிந்துபோன நாடு. சகல கட்டுமானங்களும் சிதைந்துபோன நிலையில் உதைபந்தாட்டக் குழு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள தென் கொரியா சென்றது. FIFA கொடுத்த 40000 டொலர் மற்றும் AFC பிரயாணச் செலவுகளை ஏற்றுக்கொண்டமை என்பன ஆப்கான் உதைபந்தாட்டக் குழு இருபது வருடங்களுக்குப் பின் சர்வதேச ரீதியில் பங்கு கொள்ள வாய்ப்பளித்து உண்மையேயாயினும் இன்னும் சில பரிமாணங்களும் இந்தப் பங்குபற்றலுக்குண்டு.

இவர்கள் விளையாடிய மூன்று போட்டிகளிலும் ஈரான், கட்டார், லெபனான் மூன்றும் பெற்ற கோல்களின் எண்ணிக்கை முப்பத்திரண்டு. எதிராக ஆப்கானிஸ்தான் எந்தவொரு கோலும் போடவில்லை. இருந்தும் இவர்களின் பங்குபற்றலின் பரிமாணங்கள் வெற்றி தோல்வி மட்டுமல்ல. ஒருவீரர் தாம் 20 வருடங்களின்பின் சர்வதேச அளவில் விளையாடுவது எவ்வளவு சந்தோஷமானது என்கிறார். ஆப்கான் உதைபந்தாட்டச் சார்பில் கருத்துக் கூறும் போது பல்வேறு இனக் குழுக்கள் வாழும் ஆப்கானில் அவர்களை ஒன்றிணைக்கும் சக்தியாக உதைபந்தாட்டம் விளங்கும் என்கின்றார். நீண்ட காலம் சரியான உதைபந்தாட்டப் பயிற்சிகளுக்கான வசதிகள் இன்மை, தலிபான்களால் உதைபந்தாட்டம் தடைசெய்யப்பட்டிருந்தமை என்பவற்றோடு நோக்கும்போது ஆப்கான் வீரர்கனின் மனத்தைரியமும் இலக்கும் பாரட்டப்படவேண்டியவை. அதே வேளை, AFCயின் தலைவர் பீற்றர் வேலப்பன் ஆப்கானிஸ்தானின் பங்குபற்றலை உறுதியாக ஆதரித்திருக்கின்றார். ஆப்கானிஸ்தானில் உதைபந்தாட்டத்துக்கு எவ்வளவு ஆதரவு இருக்கின்றது என்பதற்கு ஒரு உதாரணம் ஆப்கான் உதைபந்தாட்டக்குழு ISAF எனப்படும் சர்வதேச பாதுகாப்பு உதவிப் படையுடன் காபூலில் நட்புறவு ஆட்டம் ஒன்றை நடத்திய போது அரங்கத்தில்கூடிய ரசிகர் தொகை 25000 பேர். அரங்கத்துக்குள் நுழைய வழியின்றி அரங்கத்துக்கு வெளியே நின்ற ரசிகர் கூட்டம் 20000 பேர். இவ்வளவு ஆர்வம் நிறைந்த ஆப்கானிஸ்தானில் உதைபந்தாட்டம் வேகமாகவளரும் என்பதிலோ ஆப்கானிஸ்தானும் பலநாடுகளுக்குச் சமனாக தம் நாட்டு அணியை உருவாக்குவார்கள் என்பதிலோ எதுவித சந்தேகமும் இல்லை..

- சரண்யன் -

# சாதனை புரிந்திருக்கிறார்கள்



**19 வயதுப்பிரிவு** - இருப்பவர்கள்:- இடமிருந்துவலமாக இ.ஆனந்த நடராசா (உபஅதிபர்), திருமதி.ச.நாகராஜா (பொறுப்பாசிரியர்), பு.சுகன்யா (உப அணித்தலைவி), ச.சிவநேஸ்வரன் (அதிபர்), த.நிலானி (அணித்தலைவி), நா.கேதீஸ்வரன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள்:- சோ.குமுதினி, தி.சங்கீதா, கு. விலாசினி, த.சுலக்சனா, அ.அனுசியா, ந.ரமணி, மா.சுவீற்றி.

# சண்டிலிப்பாய் இந்துவின் புதல்விகள்

2002 ஆம் ஆண்டு மாகாண மட்டப் போட்டிகளின் சாதனை படைத்திருக்கிறார்கள் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி வலைப் பந்தாட்ட அணியினர். ஒரு அணியல்ல இரண்டு அணிகள் மாகாண மட்டப்போட்டிகளில் முதலிடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் 17 வயதுக்குட்பட்ட, 19 வயதுக் குட்பட்ட அணியினர். இந்த வீராங் கனைகளைச் சந்திப்பதற்காக நாங்கள் கல்லூரிக்குச் சென்றிருந்தோம்.

உரையாட ஆரம்பித்தபோது தான் உன்னத நிலையில் நிற்கும் இக்கல்லூரி எவ்வளவு இடர் களைத் தாண்டி இந்நிலையை அடைந்தது என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆரம்பத்தில் எதிர்கொண்ட இடர்களைக் கண்டு அதிபரும், ஆசிரியர்களும் மனந் தளர்ந்திருந்தால் இன்றைய நிலையை அடைந்திருக்க முடியுமா? தடைகளே ஏணிப்படிகள் என்று உயர உயர ஏறிநிற்கிறார் கள் இவர்கள்.

1992 இல் சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்தில் வலைப் பந்தாட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந் தது. 1993 இல் இருந்து 2002 வரை தொடர்ச்சியாக கோட்டமட் டப் போட்டிகள் அனைத்திலும் முதலிடம்பெற்று வருவது இவர் களின் சாதனை. யாழ்ப்பாண



தி. சங்கீதா
மலேசியா செல்லத் தெரிவானவர்.

மாவட்டத்தைப் பொறுத்தவரை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி எனும் பெயர் வலைப்பந்தாட்டத் தைப் பொறுத்தவரை பெரும் சக்தியாக உருவெடுத்திருப் பதை மறுக்க முடியாது. 1997 வரை யாழ்.மாவட்டத்தில் 17, 19 வயதுற்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணிகள் மட்டுமே இருந்திருக் கின்றன. ஆனால் 1998இல் முதன்முதலாக யாழ். மாவட்டத் தில் 15 வயதுற்குட்பட்ட அணி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு உண்மையில் மறைமுகக் கார ணியாக இருந்தவர்கள் சண்டி



நி. கிருஷாந்தினி
17 வயதிற்குட்பட்ட அணியின் தலைவி

லிப்பாய் இந்துக் கல்லூரியினரே என்பது ஒரு சுவையான சம் பவம்.

உங்களுடைய இந்த வளர்ச் சிக்கு என்ன காரணங்களைக் கூறுகிறீர்கள் என்று வினவினோம். சிறியதொரு இடம் அதாவது 100'x50' அளவுள்ளது. ஒரு பந்து, பிள்ளைகள் கொண்டிருந்த ஆர்வம் மேலும் அதிபர் ஆசிரியர்களின் பலவகையான உதவிகள் அர்ப்பணிப்புக்கள் எல்லாம் இணைந்தே இந்த வளர்ச்சி என்பதை உரையாட லில் புரிந்து கொண்டோம். வலைப் பந்தாட்டம் எங்கள் பாடசாலை யின் பெயரை பரந்தளவில் எல் லோரும் அறிந்துகொள்ள உதவி செய்தது. இதனூடாக பரஸ்பரம் பாடசாலையும், வலைப்பந்தாட்ட மும் இணைந்தே வளர்ந்து கொண்டே இருக்கின்றன. எனி னும் இவர்கள் இன்னொன்றையும் கூறுகிறார்கள். பெயர் வெளியே தெரியவராத (ஒரு காலத்தில்) ஒரு பாடசாலை சாதனை படைத் துக் கொண்டு வருகையில், இது பல பாடசாலைகளுக்கும் உந்து சக்தியாக அமைந்தது. (சின்னப் பாடசாலைகளுக்கும் சில விட யங்களில் சாதனை படைக்கத் தெரியும்). அதோடு இந்தத் தன் னம்பிக்கையோடு உடனடியாகப் பல பாடசாலைகளிலும், நீண்ட நோக்கில் யாழ்.மாவட்டத்தின் வலைப்பந்தாட்ட விளையாட்டுத் திறன், தரம் என்பன வரையும் காரணமாக அமைகிறது. மிகவும் உண்மையான கூற்றாகவே இதனை நாங்கள் ஏற்றுக் கொண் டோம்.

அதிபருடன் நிறையவே உரை யாடமுடிந்தது. 2002 இல் மாகாண மாவட்டத்தில் நடைபெற்ற பெரு விளையாட்டுகளில் யாழ்.மாவட் டம் மூன்று முதலிடங்களைப் பெற்றது. இந்த மூன்று இடங்க ளும் வலைபந்தாட்டப் போட்டிக ளாகத்தான் இருந்தன. எம்மை விட்டால், 15 வயதுக்குற்பட்ட பிரிவில் வட.இந்து முதலிடத் தைப் பெற்றது என்கிறார். அவரது உழைப்பை அவர் தம் ஆசிரிய குழாத்தின் ஒத்துழைப்பை வீராங் கனைகளின் விபரங்களைப் பற் றிய உரையாடலின்போது நன்றா கவே புரிந்து கொள்ள முடிகின் றது.

நாம் எல்லோரும் அறிந்து பாராட்டும் பல வீராங்கனைகள். அதிபர் ஆசிரியர்களின் அந்த பக்கபலம் இல்லாவிட்டால் இன்று இந்நிலையில் இருந்திருக்க அவர்களுக்கு வாய்ப்பே இருந் திருக்காது என்பதை நன்றாகவே உணர்ந்து கொண்டுள்ளனர். பெரு மிதத்தையும், பெருமைகளையும் வலைப்பந்தாட்ட வீராங்கனை களிடம் கொடுத்துவிட்டு, சுமை களையும் துன்பங்களையுமே தாம் ஏற்றுக்கொண்ட அதிப ரையும் ஆசிரியர்களையுமே நாம் அங்கு சந்தித்தோம். இதனை வீராங்கனைகள் உளப்பூர்வமாக உணர்ந்து நன்றியுடன் செயற்படு கிறார்கள் என்பதை அந்தப் பாட சாலையில் காணப்பட்ட பரஸ்பர உறவுகளின் மூலம் நன்றாகவே தெரிந்துகொண்டோம்.

மாகாண மட்டத்தில் சாதனை படைத்தால் அடுத்த கட்டம் தேசிய மட்டம். "தேசிய மட்டத் தில் கலந்துகொள்ளும் சந்தர்ப் பமே ஒரு பெருந்தகுதிதான்" என் பவர்களின் கண்களில் ஒரு நம் பிக்கை ஒளிர்கிறது. இது வெறும் கனவென்று தீர்மானிக்கத் தயக் கமாக இருக்கிறது. ஏனெனில் மிகக்குறுகிய காலத்தில் எல்லை களைத் தாண்டிநிற்கும் சண்டிலிப் பாய் இந்துக் கல்லூரியினருக்கு அடுத்தபடி என்பது எட்டமுடியாத தொன்றல்ல என்ற எண்ணத்தைப் புறந்தள்ள இயலவில்லை.

வடமாகாணத்தில் இருந்து தொடர்ச்சியாகத் தேசிய மட்டத் தில் வலைப்பந்தாட்டப் போட்டிக ளில் பங்குபற்றும் ஒரேயொரு பாடசாலையாக சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியே விளங்குகின் றது. ஆனால் இதில் ஒரு முறிவு 2000 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைகளால் மாகாணமட்டப் போட்டிகளில் கலந்துகொள்ள இவர்களால் இயலாமற் போயிற்று. மாவட்ட ரீதியில் 15,17 வயதிற் குட்பட்ட இரண்டு சம்பியன் அணி கள் மாகாண மட்டத்திற்கு சென் றிருந்தால் சாதனை புரிந்திருக்க முடியும் என்ற நம்பிக்கை அவர் களிடம் நிறையவே காணப்பட்டது.

விளையாட்டு வீராங்கனையி டம் உரையாடும்போது தன்ன டக்கமாக தம திறமையை வெளிப் படுத்தினார்கள். யாழ்.மாவட்ட அணியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் தி.சங்கீதா, சோ. பிருந்தா, லோ.கார்த்திகா, வை. பபிட்டா ஆகியோர் அங்கம் வகிப்பதாக கூறினார்கள். அதைத் தொடர்ந்து சி.சங்கீதாவும்,



தி.சங்கீதா, சோ.பிருந்தா
தேசிய மட்டத்திற்குத் தெரிவானவர்கள்.

சோ.பிருந்தாவும் மாகாண அணி யில் அங்கம் வகித்துள்ளார்கள். இதோடு நின்றுவிடவில்லை. சண் டிலிப்பாய் இந்துவின் புதல்விகள் தேசிய மட்டத்திலும் பிரதிநிதித் துவம் செய்யும் தகுதியைப் பெற் றார்கள். தேசிய மட்டத்தில் உயர் திறமையைக் காட்டிய தி.சங்கீதா தற்போது மலேசியாவில் நடை பெற்று முடிந்த கனிஷ்ட ஆசிய வலைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி யில் இலங்கையின் சார்பில் பங்கு கொள்ளத் தெரிவுசெய் யப்பட்ட வீராங்கனையாவார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக யாழ். திரும்பவேண்டிய சூழ்நிலையில் தேசிய அணியொன்றில் இணைந்து இன்னொரு தேசம் சென்று - தன்திறமையைக் காட்ட வேண்டிய பாடசாலை மாணவி அரிய சந்தர்ப்பத்தை




**17 வயதுப்பிரிவு**

இருப்பவர்கள்:- இடமிருந்துவலம்:- திரு.நா.கேதீஸ்வரன் (விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்), திருமதி.ச.சிறீகாந்தன் (பிரதி அதிபர்), ம.சர்மிலா (அணித்தலைவர்), ச.சிவநேஸ்வரன் (அதிபர்), நி.கிருஷாந்தினி (பொறுப்பாசிரியர்).

நிற்பவர்கள்:- மு.துளசிமலர், யோ.கஜேந்தினி, சோ.பிரிந்தா, அ.சுபாசினி, ஜெ.கஜிதா.

தானாகவே இழந்து நிற்கின்றார். நிச்சயம் விளையாட்டு வீரர் களுக்குப் பரவலாக இது ஒரு அதிர்ச்சிச் செய்தி. அதிபர் மட்டு மல்ல நாங்களும் அதிர்ச்சியுற்



த. நிலானி
19 வயதுக்குட்பட்ட அணியின் தலைவி.

றோம். ஆனால் அவர் நிச்சயம் இன்னொரு சந்தர்ப்பம் பெறுவார் என்பதில் அதிபர் மிகுந்த நம் பிக்கை கொண்டுள்ளார். சங்கீதா வுக்கு நாமும் நல்வாழ்துக் கூறு கின்றோம்.

இன்றுள்ள உயர்நிலைக்கு அடித்தளமிட்ட பயிற்றுநர்களை அதிபர், ஆசிரியர்கள், வீராங்கனை கள் மறக்கவேயில்லை. செல்வி சி.மனோன்மணி, து.துஷ்யந்தன் இருவரும் 95 வரை இட்ட அத்தி வாரம் பின்னர் செல்வி வை.சுபத் திராவின் பங்களிப்புடனும் அதனைத தொடர்ந்து செல்வி சி.சுகதர்சினி யின் பயிற்சிகள் இப்படியே நீண்டு கொண்டு செல்கின்றது. சண்டி லிப்பாய் இந்துவின் பெருமைக்கு காரணமானவர்களின் பெயர்ப் பட்டியல் இதில் குறிப்பாக கூற வேண்டிய விடயமொன்று உண்டு. இவர்கள் அத்தனை பேரும் தொண் டராசிரியார்கள் என்பதாகும். இவ் வளவையும் கூறிய வீராங்கனைகள் இறுதியாக ஒரு வேண்டுகோளை விடுக்கின்றார்கள். "2001-2002 காலப்பகுதிக்கு மீண்டும் வை. சுபத்தரா அவர்களே பயிற்றுன ராக இருந்தார். ஆனால் இடம் மாற்றம் என்ற வகையில் அவர் எம்மை விட்டுப் பிரிக்கப்பட்டுள் ளார். தயவுசெய்து அவரை மீண்டும் எங்களிடம் தாருங்கள்! யாழ்.மாவட்டம் வியக்கும் வண்ணம் சாதனைகள் புரிந்து காட்டுகின் றோம் என்கிறார்கள். கோரிக்கை நியாயமானதுதானே.

சிறிய பாடசாலைகள், பெரிய பாடசாலைகள், வளம்குறைந்த பாடசாலைகள், வளம்நிறைந்த பாடசாலைகள் என்று பாடசாலை களிலும் பாகுபாடுகள். ஆனாலும் சண்டிலிப்பாய் இந்து இவற்றை யெல்லாம் தூக்கி எறிந்து சில ளிச்சல் தரும் வரைகளைத் தவிடு பொடியாக்கியுள்ளது. அதுவும் விளையாட்டுத்துறையின் மூலம் தேசிய மட்டத்தில் பிரகாசிக்கும் வீராங்கனைகள், மாகாணமட்டத் தில் சிறந்த அவதானத்தைப் பெற்றவர்கள், மாவட்ட, வலய கோட்ட மட்டங்களில் தன்னிகரில் லாத வீராங்கனைகள், இப்படியெல் லாம் அவர்களின் சிறப்புக்களை வரிசைப்படுத்திக் கொண்டே போக லாம். அவர்களோ பச்சிளம் குழந் தைகளாவே எங்களுக்குக் காட்சி தந்தார்கள். இந்த எளிமை இன் னும் இவர்களின் பல சாதனை களை எமக்குக் காட்டப்போகின்றது.

படங்கள்
விஷ்ணு.

**மாகாண மட்டத்தில் நிலைகள்**

1998, 1999 15 வயதிற்குட்பட்ட அணி 2ஆம் இடம்.

1997இல் 17 வயதிற்குட்பட்ட அணி 3ஆம் இடம்.

2001இல் 19, 17 வயதிற்குட்பட்ட அணிகள் 2ஆம் இடம்

2002இல் 19, 17 வயதிற்குட்பட்ட அணிகள் 1ஆம் இடம்

குறிப்பிட்டதொரு பாடசாலை குறிப்பிட்டதொரு வருடத்தில் 2 வயதுப் பிரிவுகளில் சாம்பியன் பட்டம் பெற்றது இது முதல்முறை.

'மீண்டும் எங்கள் பயிற்றுனரை எங்களிடம் தாருங்கள். யாழ் மாவட்டம் பெருமை பெறச் சாதனைகள் புரிகிறோம்' - வீராங்கனைகள்

சந்திப்பு
நிர்மலன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

rpe;jidf;F

*நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## பொறுமையின் அர்த்தம்!

அம்பாறை - காஞ்சிரங்குடாவில் எழுந்த ஓலம் மறையுமுன்னரே - நேற்றுமுன்தினம் திருமலையில் மற்றுமொரு மனிதப்படுகொலை அவலம் நடந்தேறியிருக்கின்றது.

யுத்தத்தின் சத்தங்கள் ஓய்துள்ளதென மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் போது- அமைதியை கிழித்தெறியுமாப்போல திருமலையில் மூன்று அப்பாவிப் பொதுமக்கள் துடிதுடிக்கக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

சமாதானத்தின் குரல் வளையை இறுகப்பற்றி நசுக்குவதாக - கிழக்கிலிருந்து எழும் மனித அவலங்கள், தமிழ் மக்களை குறிவைத்துத் தாக்குகின்றன.

சமாதானத்திற்கான விசுவாசத்திற்காக பதினொரு மனித உயிர்களை தமிழினம் இழந்திருக்கிறது. மிலேச்சத்தனமான தாக்குதல்கள் மத்தியிலும்- பொறுமையை இழந்து விடாமல் அமைதிக்கான விலையை ஒவ்வொரு தமிழனும் செலுத்திக் கொண்டிருக்கிறான்.

உரிமைகளை காப்பதற்காக- அகிம்சை வழியில் பலமுறை போராடித் தோற்றபோதும் - நியாயமும், அர்ப்பணிப்பும் கொண்டு தமிழினம் நடாத்தி வருகின்ற சத்தியப்போருக்கு பெரும்பான்மைச் சமூகத்தின் ஒரு பிரிவினரும், படையினரும் தந்திருக்கின்ற மற்றொரு பதிலே- காஞ்சிரங்குடா மற்றும் திருமலைச் சம்பவங்கள் ஆகும்.

இவ்வளவு நடந்த பின்பும் தம் எதிர்ப்பையும் கண்டனத்தையும் வேதனையையும் - துக்கதினம் மூலமாகவே தமிழினம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

வீரம் விளையாடிய மண் இன்று தன்னிலை காத்து தணிந்து நிற்கின்றது. இன்னமும் சந்தர்ப்பம் கொடுப்போம் என எரிமலையாகும் நெஞ்சங்கள் அமைதி காத்து நிற்கின்றன.

இவையெல்லாம் எதற்காக என்பதை அரசாங்கமும், பெரும்பான்மைச் சமூகமும் உணரவேண்டும். அமைதி வேண்டும் என்பதற்காக அடங்கிப் போயிருக்கும் தமிழினத்தின் உணர்வலைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

எங்களது உறவுகளைத் தொலைத்த போதும்- தமிழினம் சமாதானத்தின் பாதையில் உறுதியாகவுள்ளது என்பது பலவீனத்தின் வெளிப்பாடல்ல என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்கவேண்டும், சர்வதேசமும் அதை உணரவேண்டும்.

இனியும் இவ்வாறான சம்பவங்கள் நடக்ககூடாது என தமிழினம் விண்ணப்பித்து நிற்கும் என அரசாங்கம் எதிர்பார்க்கக்கூடாது. நடக்காமல் காப்பதே தனக்கு அழகு என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ளத் தவறினால் - இலங்கைத்தீவில் அமைதி என்பது எட்டாக்கனியாகவே ஆகிவிடும்.

இனி எந்த நடவடிக்கையும் அரசாங்கத்திலேயே தங்கியுள்ளது. தான் தேர்ந்தெடுக்கப்போகும் பாதை எதுவென்பதும், அதற்காக மேற்கொள்ள வேண்டிய அவசியமானதும் உடனடியானதுமான செயற்பாடுகளும் அரசாங்கத்திற்கே உரியன.

அமைதிக்கான அருமையான வாய்ப்பொன்றை நழுவவிடாது பார்த்துக்கொள்ளும் இறுதிப் பொறுப்பும் அரசாங்கத்திடமே உள்ளது.

இவை ஒருபுறமிருக்க, காஞ்சிரங்குடாவிலும், திருமலையிலும் - உள்ளங்குமுறும் வண்ணம் உறவுகளை இழந்து நிற்கும் எம் சகோதரர்களின் கரங்களை நாம் ஒவ்வொருவரும் இறுகப்பற்றிக் கொள்வோம்.

எமது இனத்தின் உரிமைக்காக உரத்துக் கிளம்பிய அந்தக் குரல்களுக்காக நாம் மௌனம் கொள்வோம்.

எமது இதயங்களிலிருந்து வழியும் கண்ணீரோடு எம் சகோதரர்களுக்காக அஞ்சலி செலுத்திக்கொள்கின்றோம்.

# கல்விச் செயற்பாடுகளுக்கு உதவுமாறு ஜப்பானிய கூட்டுத்தாபனத்திடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் விஜயம் செய்த ஜப்பானிய சர்வமதக் கூட்டுத்தாபனத்திடம் வடகிழக்குப் பகுதிகளில் மொத்தமாக 80 விஞ்ஞான ஆய்வுகூடங்களை ஸ்தாபித்து, அதற்குரிய கருவிகளையும் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்.செயலகத்தில் ஜப்பானிய சர்வதேச கூட்டுத்தாபனத்திற்கும் யாழ்.கல்வி வலயங்களுக்கும் இடையில் இடம்பெற்ற குறுகிய நேர கலந்துரையாடலில் 20 க.பொ.த. உயர்தரப்பாடசாலைகளுக்கான விஞ்ஞான ஆய்வு கூடங்களையும் 60 க.பொ.த. சாதாரணத்திற்குரிய விஞ்ஞான ஆய்வு கூடங்களையும் அமைத்துத்தர ஒழுங்கு செய்ய வேண்டும் எனவும் அதற்கான கருவிகளினையும் தந்துதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

மேலும் உயர்தரப்பாடசாலைகளுக்கான மின்பிறப்பாக்கி வசதிகளையும், கணினி வசதிகளையும் செய்து தருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவ்வேண்டுகோள்களில் கணனிக் கற்கை நிறுவனங்களினை ஒவ்வொரு வலயங்களிலும் ஸ்தாபித்துத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன் பாடசாலைகளுக்கான தளபாடங்களினையும் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதில் குறிப்பாக தென்மராட்சி வலயங்களிற்கான தளபாடப் பற்றாக்குறையினை நீக்குமுகமாக இக்கோரிக்கை அமைந்திருந்தது.

ஒவ்வொரு கல்வி வலயங்களுக்குமான பணிப்பாளர், பொறியியலாளர்கள் என்போருக்கான வாகனவசதிகளைத் தந்துதவுமாறும் கேட்கப்பட்டிருந்தது.

எனினும் இக் கோரிக்கைகளுக்கான சாத்தியப்பாடுகளை எடுத்து ஆராய்வதாக ஜப்பானிய சர்வதேச கூட்டுத்தாபன பிரதிநிதிகள் கூறியிருந்தனர். (உ, க)

# ஏ-9 வழியாக சிறைக் கைதிகள்; கொழும்பில் விரிவாக ஆராய்வு!

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்திலிருந்து சிறைக் கைதிகளைத் தரை மார்க்கமாக கொழும்புக்கு அனுப்புவது தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

இந்தப் பேச்சுக்களுக்கான முன்னாயத்தங்களைக் கவனிக்கும் வகையில் கொழும்பிலுள்ள சிறைச்சாலைத் திணைக்கள அதிகாரிகளுடன் ஆராய்வதற்காக யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.சிவசுந்தரம் கொழும்புக்குச் சென்றிருப்பதாகவும் தெரியவருகின்றது.

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை கொழும்பு மற்றும் தென்பகுதி நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் முன்னர் செய்யப்பட்டிருந்தது. ஒரு சில சந்தர்ப்பங்களில் கைதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியூடாக அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

பின்னர் படையினரின் தலையீட்டால் கைதிகளைத் தரை மார்க்கமாக அழைத்துச் செல்லப்படுவது நிறுத்தப்பட்டிருந்தது. நாட்டில் ஏற்பட்டுள்ள சுமுக நிலையை அடுத்து மீளவும் கைதிகளைத் தரைமார்க்கமாக அனுப்புவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தீவிரமாக யோசித்து வருகிறது.

# நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் திருத்தப்படாதுள்ள மருதங்கேணிப் பாலம்

(மருதங்கேணி)

நீண்டகாலமாகப் பழுதடைந்துள்ள மருதங்கேணிப் பாலத்தை திருத்துவதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

15 வருடங்களாக திருத்தப்படாது பழுதடைந்த நிலையில் இருந்த பாலத்தினைத் திருத்துவதற்காக புனரமைப்புக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் பாலம் திருத்தப்படாமல் இருப்பதாகவும் இதனால் மாரிகாலத்தில் பயணங்கள் தடைப்படும் நிலை ஏற்படும் எனவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (18)

# பல்கலைக்கழக மனித உரிமைகள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

"மனித உரிமைகளுக்கான இல்லம்" என்ற மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நிறுவனம் மேற்படி கருத்தரங்கை நடாத்தியுள்ளது.

அண்மையில் கொழும்பில் இருந்து வருகை தந்த மேற்படி நிறுவனத்தைச் சேர்ந்த சட்டத்துறை நிபுணரான எஸ்.சூசைதாசன் மற்றும் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். வதிவிடப்பிரதிநிதி ஆகியோர் மேற்படி கருத்தரங்கில் கருத்துரைகள் வழங்கினர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இக்கருத்தரங்கில் மனித உரிமை விவகாரங்களில் ஆர்வம் கொண்ட கல்விசார் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.(க)

# இலவச நூல் விநியோகம் ஆராயக் குழு வருகிறது

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் புத்தக வெளியீட்டுக் குழு ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது.

2003ஆம் ஆண்டிற்கான இலவச பாடப்புத்தகங்களை விநியோகிப்பது தொடர்பாகவும் அவற்றை துரிதமாக பாடசாலைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வதற்காகவே இக்குழு வந்துள்ளதாக தெரியவருகின்றது.

குடாநாட்டில் உள்ள பாடசாலைகளுக்கு இக்குழு சென்று அதிபர்களைச் சந்தித்து இது தொடர்பான கருத்துக்களை திரட்ட உள்ளதாகவும் தெரியவருகிறது.

1990க்குப் பின்னர் கப்பல் மூலமே இலவசப் பாடப் புத்தகங்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. இம்முறை 12 வருடத்திற்குப் பின்னர் முதற்றடவையாக லொறிகள் மூலம் இலவசப் பாடப்புத்தகங்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஐ.தே.க. அரசாங்கம்**

# மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து செயற்படவில்லையாம்!

## குற்றம் சுமத்துகிறார் மகிந்த

(கொழும்பு)

நாட்டிலுள்ள மக்களின் விருப்பு வெறுப்புக்களை ஐ.தே.கட்சி அரசாங்கம் புரிந்து செயற்படவில்லை என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் சிறிலங்கா சுதந்திர ஊழியர் சங்கக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது ஜனநாயகத்துக்கு விரோதமாக பல சட்டமூலங்களை அரசாங்கம் இயற்றி வருகின்றது எனக் குறிப்பிட்ட அவர் - ஐ.தே.கட்சி அரசாங்கம் மக்களுக்காக செயற்பட்டு வருவதாக கூறிவருவதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

# வன்னி, கிழக்கு அபிவிருத்தி அமைச்சுகளுக்கு நேரடி வெளிநாட்டு உதவி பெற்றுத் தரப்படுமாம்!

(கொழும்பு நிருபர்)

நேற்றுமுன்தினம் முஸ்லீம் உலமாக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அவரது அலரி மாளிகையில் சந்தித்த போது, அவர்களிடம் பிரதமர் வடக்கு-கிழக்கு பகுதிகளில் இடைக்கால நிர்வாகம் வரவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிழக்கு மாகாண முஸ்லீம்களின் சமூக அபிவிருத்தி, அரசியல் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்படும என அவர்களிடம் தெரிவித்த பிரதமர்- தாய்லாந்து பேச்சுக்களின் பின்னர் முஸ்லீம்களுடன் கலந்தாலோசித்தே முடிவு எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

அதேவேளை - வன்னிப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு மற்றும் கிழக்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சு ஆகிய இரு அமைச்சுக்களிற்கும் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக வெளிநாடுகளிலிருந்து நேரடியான நிதி உதவியினைப் பெற ஆவன செய்வதாகவும் கூறியுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் தொழிலற்றோர்; மிக விரைவில் களநிலை ஆய்வு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தொழில்வாய்ப்பு இன்றியுள்ள இளைஞர் யுவதிகள் தொடர்பான கள நிலை ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்படி ஆய்வை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச பிரிவிலும் இவ் ஆய்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பிரிவு ரீதியாகவும் களநிலை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு இவ்வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவ் ஆய்வு வேலைகள் நிறைவடைந்ததும் யாழ்.மாவட்டத்தில் உள்ள தொழில் வாயப்பு இன்றிருக்கும் இளைஞர், யுவதிகள் தொடர்பான முழுமையான ஆகப் பிந்திய நிலைப்பாடு பற்றிய தகவல்கள் வெளிக்கொண்டு வரப்படும். இவ்வாறான தகவல்களை அடிப்படையாக வைத்து இறுதி அறிக்கை ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

(க)

# ஆட்சியைத் தக்கவைக்க தோள் கொடுப்பது யார்? கம்பிமேல் நடக்கும் கழைக்கூத்தாடியாக ரணில்!

இலங்கையின் அரசியலும் இனப்பிரச்சனைத் தீர்வும் இரண்டறக் கலந்துள்ளன.

ஒரு காலத்தில் இலங்கைக் கிரிக்கெட் அணி தொடர் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டிருந்த வேளையில் அதனை சாதகமாகப் பயன்படுத்தி முன்னைய அரசாங்கம் பொருளாதாரத் தளம்பல்களைச்



சீர்செய்ய எத்தனித்தது. அதன் அடிப்படையில் பாரிய விலை உயர்வுகள் அனைத்துப் பொருட்களிலும் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் போர் ஒன்று இடம் பெற்றுக் கொண்டிருந்ததால் நாட்டின் அனைத்து மக்களும அதன் சுமைகளைத் தாங்குவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர்.

யுத்தமும், பொருளாதார வீழ்ச்சியும் ஒருங்கே சென்று கொண்டிருந்த வேளையில் உற்பத்தி மேம்படுத்தல் இன்றைய நிலையில் அன்றைய அரசாங்கம் மக்கள் நல அபிவிருத்திகளை முன்கொண்டு செல்லவில்லை. இதன்காரணமாகவே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் வீழ்ச்சியடைய நேரிட்டது. இந்த நிலையில் சமாதானக் கோஷத்துடன் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அந்த சமாதான கோஷத்தை அடிப்படையாகக் கொண்டே நாட்டின் திட்டங்களை இயக்கிக் கொண்டிருக்கிறது. இலங்கை மக்கள் சமாதான இயல்பு நிலையை எய்துவதற்கு பல தியாகங்களைச் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் இன்று சிக்கல்களுக்கு உட்பட்டிருக்கின்றன. ஏற்கனவே போரொன்றினால் அழிவுக்குள்ளான இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நிதியுதவிகளைப் பெறவேண்டுமாயின் அரசாங்கம் சமாதான இயல்பு நிலையை முழு உலகததுக்கும் காட்டவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறான சூழ்நிலையில் அரசாங்கம் சென்று கொண்டிருக்கும் அதேநேரம், அரசாங்கத்தின் கூட்டுக்கட்சிகள் தமக்கு அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை வெற்றி கொள்வதற்கு முயன்று வருகின்றன. இதன் காரணமாக சமாதானம் என்ற ஒரே பாதையில் சென்று கொண்டிருக்கும் அரசாங்கம் - பல்வேறு பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. ஏற்கனவே இலங்கையில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை கொண்டிருக்காத ஐக்கிய தேசியக் கட்சி, தமது முன்னைய அரசாங்கத்தில் இணைந்திருக்கும் பல கட்சிகளினதும் வலியுறுத்தல்களுக்கு உட்பட்டு வருவதால், சமாதான முன்னெடுப்பிலும் சில தாமதங்களை ஏற்படுத்த வேண்டிய கட்டாயத்துக்கு ஆட்பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மற்றும் மலையக மக்கள் முன்னணி என்பன அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றன. இவை தமது மக்களின் நலன்கள் தொடர்பில் முன்வைத்த நிபந்தனைகளை அவசரப்பட்டு நிறைவேற்றிக் கொள்ள முனைவதால் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன.

நடைமுறையில் ஒவ்வொரு நாளும் அரசாங்கம், இந்தக் கட்சியினரின் ஏதாவது ஒரு நிபந்தனைகளுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறது. மறுபுறத்தில் சமாதான நிலைப்பாட்டில் தமது சம அந்தஸ்துக் கட்சியான தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டையும் தளரவிடாமல் பாரத்துக் கொள்ளவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அதே நேரம் ஐக்கிய தேசிய முன்னணியில் ஆட்சியை வீழ்த்துவதறகு முயன்று கொண்டிருக்கும் ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பலத்தைக் குறைக்கும் முன்னெடுப்புக்களையும் கவனிக்க வேண்டியுள்ளது.

இன்றைய நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடாக சமாதான முன்னெடுப்பு, போர்நிறுத்தம் மற்றும் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி, மீள் குடியேற்றம், பாதுகாப்பு படையினரை தளம்பாமல் பார்த்துக் கொள்வதில் அரசாங்கம கவனததைச் செலுத்த வேண்டியுள்ளது.

மறுபுறத்தில் சர்வ அதிகாரத்தைக் கொண்டுள்ள ஜனாதிபதி யின் பொதுஜன ஐக்கிய முன்னணி தமது ஆட்சியை கவிழத்துவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். உள்ள கத்தரப்பில் தமது கூட்டணிக் கட்சிகளின் முரண்பாடுகளை சமாளிக்க வேண்டியநிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஆட்சியினை நடத்திச் செல்கிறது. இதற்குப் புறம்பாக தென்னிலங்கை மக்களை சமாளிக்க வேண்டிய கடமை முன்னே நிற்கிறது. ஏனைய அனைத்து பிரச்சினைகளையும் முடித்து விட்டு திருப்தியுடன் திரும்பிப் பார்த்தாலும் தென்னிலங்கை மக்கள் கருணை காட்டினால்தான் அரசாங்கம் தமது அரசியல் இயந்திரத்தை நகர்த்த முடியும்.

இவ்வாறானதொரு இக்கட்டான நிலையில், இருக்கும் ஐக்கிய



தேசிய முன்னணி அரசு தற்சமயம் கிழக்கிலங்கை முஸ்லிமகளின் தனி அதிகார அலகு என்ற விடயத்துக்கு சமாளிப்புகளை செய்து கொண்டிருக்கிறது.

எந்த அரசாங்கத்துடனும் பேரம் பேசலை சற்று உச்சமாகவே பயன்படுத்திக் கொள்ளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தையும் விட்டு வைக்கவில்லை. இதன உச்சக் கட்டம் நாடாளுமன்ற பகிஷ்கரிப்பு என்ற நிலைவரை சென்றிருக்கிறது எனினும் அரசாங்கம வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபையின் கீழ் அனைத்து இனத்தினருக்கும் சமஉரிமை வழங்கப்படும் என்ற உறுதிமொழியுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கைகளின் வேகத்தை கட்டுபடுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள்ளும் ஏற்கனவே இருந்து வந்த - கிழக்கு மாகாண தலைமை, தென்னிலங்கை தலைமை என்ற முரண்பாடுகள் உக்கிரம் பெற்றுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முனணி என்பன மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளாக இருக்கின்ற போதிலும், அவற்றை சமாளிப்பது ரணில்விக்கிரமசிங்கவின்

**இந்திரஜித்**

அரசாங்கத்துக்கு பாரிய பிரச்சினைகளாக அமையப் போவதில்லை. இந்தக் கட்சிகள் பதவிக்கு வரும் அரசாங்கங்களில் அங்கம் வகிப் பதன் மூலமே தமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்ற கொள்கைகளை கொண்டிருப்பது இதன் பிரதான காரணங்களாகும்.

ஐக்கிய தேசிய முன்ணணி அமைவதற்கு காரணமாக இருந்த அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி. திஸாநாயக்க மற்றும் மகிந்த விஜயசேகர என்போரை அரசாங்கம் உரிய முறையில் உபசரிப்பதால் அவர்களால் அரசுக்கு அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்பில்லை.

தமது முன்னணிக்கு அப்பாற்பட்டு அரசாங்கம் இன்று தென்னிலங்கை உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மேற் கொண்டுள்ள தனியார் மயமாக்கல் பாரிய எதிர்ப்புகளை உருவாக்கியுள்ளது.

காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு அவ்வளவாக பிரச்சினை எழாவிட்டாலும் மின்சாரசபை, அரசாங்க வங்கிகள் என்பவற்றை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் உதவியுடன் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த அழுத்தங்களுக்கு பயந்து அரசாங்கம் தமது கொள்கையினை கைவிடுமானால், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் உட்பட உதவி அமைப்பு



களின் ஒத்துழைப்புகளை இழக்க வேண்டியிருக்கும். இது அரசாங்கம் கவிழ்வதற்கான நிலையை ஏற்படுத்தி விடும்.

இந்த நிலையில், மேற்கூறிய பிரச்சினைகளை அரசாங்கம் ஓரளவு சமாளித்துள்ள நிலையில் எதிர் வரும் வாரத்தில் நாடாளுமன்றத்தில் வெளியிடப்படவிருக்கும் 18 ஆம் 19ஆம் அரசியலமைப்பு தொடர்பான உயா நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னரே எதிர்கால அந்த எதிர்வுகூறல் ஜனாதிபதியின் இணக்கத்துடனான தேசிய நல்லிணக்க அரசாங்கமா? அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின ஆதரவுடனான தமிழ்க் கூட்டமைப்பின் ஒத்துழைப்பின் மத்தியிலான புதிய தேர்தலா? என்பதாக இருக்கும் என்பதே அவதானிகளின் கருத்தாகும்.


## அரியாலை அண்ணமார் ஆலய "சக்தி" பண்ணிசை மன்றம் நடாத்தும் மாதாந்த சமய அறிவுப் போட்டி

மேற்படி சமய அறிவுப் போர்ட்டியில் ஆடி, ஆவணி மாதங்களில் வெற்றி பெற்றவர்கள்.

ஆடி மாதம்

1ஆம் இடம் செல்வி இராசதுரை சுகன்ஜா
2ஆம் இடம் செல்வி பார்த்தீபன் ஸ்ரீரூபா
3ஆம் இடம் செல்வன் சண்முகராஜா சபீகரன்

ஆவணி மாதம்

1ஆம் இடம் செல்வன் இராசதுரை சுதாகரன்
2ஆம் இடம் செல்வி ஸ்ரீகாந்தன் கஸ்தூரி
3ஆம் இடம் செல்வன் சண்முகராஜா சபீகரன்

இவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

~ சக்தி பண்ணிசை மன்றம்
(அரியாலை அண்ணமார் ஆலயம்)

(சி-057)



சுன்னாகத்தில் ..

## எரிக் கணேஷ்

- இலவசமாக கண்களை பரிசோதித்து தரம்மிக்க மூக்குக் கண்ணாடிகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும்
- சீன முறையில் பயிற்சிபெற்ற நிபுணர்களினால் சொந்தப் பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும்.
- மிதப்புப் பற்களை 3 மாத காலத்தினுள் சீரமைத்துக் கொள்ளவும்

இத்தனைக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.... எரிக் கணேஷ்

பாடசாலை மாணவர்களுக்கு விசேட கழிவுண்டு

எரிக் கணேஷ்

மூக்குக்கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்
564, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்:- 80, K.K.S. Rd, சுன்னாகம். 91, K.K.S. Rd, கொக்குவில்.

(சி-034)


## சட்டவிரோத மதுபான சாலைகள் மீது நடவடிக்கை

(வண்ணை)

யாழ். குடாநாட்டில் பரவலாக காணப்பட்ட சட்டவிரோத மதுபான சாலைகளை மூடும் முயற்சியில் மதுவரித் திணைக்களம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

கடந்த சில வருடங்களாக இடம் பெற்ற பல குற்றச்செயல்களுக்கு இவையே காரணமாக இருந்தன. தற்போது ஏற்பட்டுள்ள சமூக நிலைமையை அடுத்து சட்டவிரோத மதுபானசாலைகள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (111)

## இரத்மலானையில் சிப்பாய்கள் ஒருவர் மீது ஒருவர் சூடு

(கொழும்பு நிருபர்)

இரத்மலானை விமானப் படைத் தளத்தில் பணியாற்றும் இரண்டு சிப்பாய்கள் தமக்கிடையில் துப்பாக்கிகளைக் கொண்டு தாக்குதலில் இறங்கியதில் ஒருவர் பலியானார், மற்றவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. அத்திட்டிய சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த இவ்விரு சிப்பாய்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதமே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குக் காரணம் எனத் தெரியவருகின்றது.

## அர்ப்பணத்தின் அழைப்புக்கு அர்த்தமூட்டிய புனிதம்

"அழைப்புப் பெற்றவர்கள் பலர், ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களோ சிலர்" (மத்தேயு 22-14)

எந்த விடயங்களிலும் எல்லோரும் ஈடுபடவேண்டும் என ஆவல் கொண்டாலும் எல்லோருக்கும் அந்த சந்தர்ப்பங்கள் முழுமையாக கிட்டுவதில்லை. எதிர்பாராநிலையில் சிலருக்கு அச்சந்தர்ப்பங்கள் சாதகமாகிவிடுகிறது.

தகுதி, அந்தஸ்து, பணபலம் கொண்டு சிலதை பெற்றுவிடலாம் என்பார் சிலர். எவருக்கு எது தேவையோ அதனை நன்கொடை, அன்பளிப்பு என லஞ்சம் கொடுத்து சாதித்து விட்டோம் என திருப்தி கொள்வோரும் எம் சூழலில் வாழத்தான் முனைகிறார்கள். ஆன்மீகப்பயணத்தில் இவை தற்காலிகமான உலகியல் ஆசையின் கானல்நீர் வாழ்வு என்பதை பலரின் வாழ்வு சாட்சிபகரும்.

இறை வழியில் கிட்டும் அழைப்புகள் ஒவ்வொருவருக்கும் பல்வேறு பணித்தளங்களில் அழைப்பு விடப்பட்டபோதும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக தம்பணிவாழ்வில் சாட்சிபகர்ந்தோர் வாழ்வு புனிதமானதாக போற்றப்படும். தியாகிகளைப் புனிதர்களாக சமூகம் ஏற்றுக் கொண்டதை நம் காலத்து புனிதை அன்னை திரேசாவின் வாழ்வையும் வழிகாட்டலையும் தக்கசான்றாக உலகமே ஏற்றுக்கொண்டது.

பெண்ணியம் பேசும் காலத்தில், பெண்கள் ஏற்படுத்தி வரும் சமூக மாற்றங்கள் பல்வேறு வடிவங்களாக வெளிப்படுத்தப்படுவது போல் ஆன்மீக வழிநின்று ஆற்றுப் படுத்துதலுடன், ஆன்மீகப் பற்றுறுதியுடனும் வழிகாட்டும் புனிதையாகவும் வாழ்வால் சாட்சிபகர்ந்த அன்னை திரேசாவின் வாழ்வு இறை அனுபவத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரில் ஒருவராக வாழ்வில் சாட்சியம் பகர்ந்து, பெண்மைக்கு பெருமை சேர்ப்பதுடன் மட்டுமல்லாது பல பெண்களை அப்பணிவாழ்வுப் பயணத்தில் தொடரவைத்ததே கண்கண்ட அழைப்பின் சாட்சியமாகும்.

சமூகப்பணி, சமயப்பணி எதுவானாலும் தன்புகழ், தன்வாழ்வு என குறுகிய வட்டத்தில் தூரநோக்கின்றி நீர்க்குமிழிகளாக தோன்றி மறைந்து விடும் மனித சிந்தையில் புனிதம் காத்து தனக்குப் பின் தன் வாரீசுகளை உருவாக்குவோர் அரிதாக உள்ள காலத்தில் "எல்லாப் புகழும் இறைவனுக்கே" என்று சொல்லாலும் செயலாலும் தன்முன்னே தன் பணியாள் முன்செல்வதை உருவாக்கும் தலைமைத்துவங்களை உருவாக்கி வாழுதலை வாழ்வில் வெளிப்படுத்தும் அர்பணத்தின் அழைப்புக்கு அகிலமே இன்று தலை வணங்குகிறது, புனிதத்தின் அர்பணத்தை புகழ்ந்துரைக்கிறது.

இன்றைய உலகில் அர்ப்பண அழைப்புகள் பெரும் சவால்களே, உலக இச்சைகள், ஆசாபாசங்கள், கவர்ச்சி உலகில் ஆன்மீக வாழ்வில் புடமிடப்படுவதும் உருவாக்கம் பெறுவதும் நாளுக்கு நாள் ஏற்படும் பலமுனை சவால்களுக்கு முகம் கொடுப்பதில் சாத்தானை வெல்லவேண்டிய சூழலில் தேர்ந்தெடுக்கும் அழைப்புகள் நிறைவேற்றுவது மிகவும் கடினமானதே. இதைவெல்ல ஆன்மீக ஆழப்படுத்தல் அவசியமாகிறது.

வீண்பேச்சும், விமர்சனங்களும், தீர்ப்பிடும் கூட்டமும் நிறைகளை விட குறைகளையே சுட்டிக்காட்டும் நீதிமான்களாக தம்மை வெளிப்படுத்திக் கொள்வோராலும் துன்புறுத்தப்படுவோர் பலர். யார் என்ன சொன்னாலும் என தம் வாழ்வை ஆன்மீகத்தில் புடமிடப் பழக்கப்படுத்துவதில் இறைவார்த்தையும், மனசாட்சியமும் சுயமதிப்பீடு செய்து வாழும் பக்குவமும் தான் தேர்ந்தெடுத்த வாழ்வை வெற்றியுடன் சென்றடையவும் அழைப்புக்கு அர்த்தமூட்டவும் முடியும்.



- யோசப் பாலா.

# திருமலையில் முப்படைத்தளபதிகள் — புலிகள் சந்திப்பு





திருமலைக் கடற்படைத்தளத்தில் நடைபெற்ற முப்படைத்தளபதிகள் - விடுதலைப்புலிகள் சந்திப்புக்கு இராணுவத்தளபதி லயனல் பலகல்ல வருகை தருவதை முதலாவது படத்திலும் கடற்படையின் பிரதித் தளபதியும் கிழக்குக் கடற்பிராந்தியத் தளபதியுமான ரியர் அட்மிரல் ரட்ண கீர்த்தி வருவதை இரண்டாவது படத்திலும் விமானப் படையைச் சேர்ந்த விங் கொமாண்டர் டொனால்ட் பெரேரா போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் புறூவ் ஹொவ்டேயுடன் வருகை தருவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

மேற்படி மாநாட்டுக்கு பொலிஸ்மா அதிபர் ஏ.ரீ. ஆனந்தராஜா வருவதை முதல் படத்திலும் விடுதலைப்புலிகளின் திருமலை நகர அரசியற்துறை பொறுப்பாளர் ராஜேஸ், திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோர் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினருடன் காணப்படுவதை இரண்டாவது படத்திலும் படை அதிகாரிகள் மாநாடு நடக்கும் இடத்துக்கு மாடிப்படிகள் வழியே செல்வதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் -கௌதமன்)

## மீள் குடியேற்ற நடவடிக்கைக்கு ஒரு கோடி அமெ.டொலர் தேவை

### - யு.என்.எச்.சி.ஆர். சர்வதேசத்திடம் கேட்கிறது -

(கொழும்பு)

வடக்கு ,கிழக்கில் இருந்து யுத்த நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேற்றும் நடவடிக்கைக்காக 1கோடி அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்குமாறு சர்வதேச சமூகத்திடம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மீளக்குடியமரும் மக்களுக்குத் தேவையான நிவாரணங்களையும் அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே இந்த நிதி உதவி தேவைப்படுவதாக உயர் ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் இதுவரை 109,000 மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

#### யு.என்.எச்.சி.ஆர். உதவி

புலோப்பளையில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு எதிர்வரும் புதன்கிழமை காலை கிளிநொச்சியிலுள்ள யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்தில் உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

வாளி, பாய், உடுபுடவை, படுக்கை விரிப்பு ஆகிய பொருட்களே வழங்கப்படவுள்ளது. எனவே மேற்படி பகுதியில் வாழும் மக்கள் ஆயத்தமாக புதன்கிழமை மேற்படி அலுவலகத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## - குருநகர்ப் பகுதியில் -

## 15 லீற்றர் கசிப்புடன் வந்த நபரை விழிப்புக் குழுவினர் மடக்கிப் பிடித்தனர்

குருநகர் கடற்கரை வீதியால் கடத்திச் செல்லப்பட்ட 15 லீற்றர் கசிப்பு அப்பகுதி இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு கைப்பற்றப் பட்டது.

கசிப்பு விறபனை செய்வதை நிறுத்தக் கோரி கசிப்பு விற்பனை செய்பவர்களை விடுதலைப் புலிகள் எச்சரித்த போதிலும் களவாகக் கசிப்பு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனை அறிந்த சென்.றோக்ஸ் [illegible]சமூக விழிப்புணர்வுக் குழுவினர் [illegible]ற்றை முழு அளவில் நிறுத்தத் [illegible]மிட்டு வீதிகளில் காத்திருந் [illegible]டன் தேடுதல்களையும் நடத்தினர். வியாழக்கிழமையன்று அதி காலை 5 மணியளவில் 15 லீற்றர் கசிப்பினை நபர் ஒருவர் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் இடத்திற்கு கொண்டு வர முற்பட்டபோது ஏற்கனவே தயார் நிலையில் இருந்த விழிப்புக் குழுவினர் மடக்கி பிடித்ததுடன் 15 லீற்றர் கசிப்பினையும் கைபபற்றினர்.

பின்னர் விடுதலைப் புலிகளிடம் முறைப்பாடு செய்து விட்டு கசிப்பை மக்கள் பார்வைக்கு வைத்து விட்டு பின்னர் மாலை மக்கள் முன்னிலையில் நிலத்தில் ஊற்றி அழித்துவிட்டனர்.

கசிப்புக் காய்ச்சி கொண்டு சென்றவர் விழிப்புக் குழுவினரால் எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப் பட்டார்.

## பொ.ஐ.முவின் ஆறு உறுப்பினர்கள் மீது கட்சிக் கொறடா நடவடிக்கை

### அரசுக்கு ஆதரவளிப்பதாகச் சந்தேகம்

(கொழும்பு)

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் மின்சார சீர்திருத்தச் சட்ட மசோதா மீதான வாக்கெடுப்பு நிகழ்ந்த போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்கவில்லை. இவர்களில் மூவர் வெளிநாடுகளில் தற்சமயம் இருப்பதினாலும், ஒருவர் சுகயீனம் காரணமாகவும் சமுகமளிக்கவில்லை எனவும் தெரியவருகின்றது. ஏனைய ஆறு உறுப்பினர்களும் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டினை எடுத்திருக்கலாம் என்ற சந்தேகத்தினால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதம கொறடா மங்கள சமரவீர, வாக்கெடுப்பு நடத்திய சமயம் சமுகமளிக்காத பாராளுமன்ற உறுப்பினர்களிடம் விளக்கங் கோரியிருப்பதுடன் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## இன்றைய நாள் இனிய நாள்

**13.10.2002 - ஞாயிற்றுக்கிழமை**

**மேடம்** :- தேகசுகம் நன்று, மகிழ்ச்சி, எடுத்த காரியாம் வெற்றி, பிதாவுடன் நல்லுறவு, மாணவர் மகிழ்ச்சி.

**இடபம்** :- தேகசுகக் குறைவு, தேவையற்றயோசனை, எடுத்த காரியம் தாமதம், கல்வியில் ஊக்கம் காட்டவேண்டும்.

**மிதுனம்** :- மகிழ்ச்சி, இனசனக் கொண்டாட்டம், கல்விமுன்னேற்றம், வாகனப்பலன், அறுசுவையுண்டி.

**கர்க்கடகம்** :- தேகசுகக்குறைவு, எந்தத் தொழிலிலும் சிந்தனை இல்லை, வரவுக்கு மிஞ்சிய செலவு, எதையும் ரசிக்கும் சிந்தனை இல்லை.

**சிங்கம்** :- தேகசுகம் நன்று, கலைநிகழ்ச்சிகளில் பங்கு, எடுத்த காரியம் வெற்றி,இனசனக்கொண்டாட்டம், கல்வி முன்னேற்றம்.

**கன்னி** :- வைத்தியச்செலவு, பயந்தநிலை,காயமேற்படுதல், கல்வி முன்னோற்றம், தேவையற்ற செலவு.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- அயலில் உறவு பேணப்படல் வேண்டும், எடுத்தகாரியம் நஷ்டம், உறவினர் வருகை.

**விருச்சிகம்** :- உடல் தளர்வு, மனத்தளர்ச்சி, தேவையற்ற வாக்குவாதம், வரவுக்குகேற்ற செலவு.

**தனு** :- விருந்தினரால் மகிழ்ச்சி, அறுசுவையுண்டி, ஆடை அலங்காரத்தில் நிறைவு, கலை நிகழ்ச்சி ரசனை.

**மகரம்** :- எடுத்தகாரியம் தாமதமாக நிறைவேறும், கர்வத்தினால் தேவையற்ற செலவு, தேவையற்ற விவகாரங்களில் ஈடுபடுதல் நன்றல்ல.

**கும்பம்** :- தொழில் முயற்சி வெற்றி, பெண்களால் மகிழ்ச்சி, சான்றோர் தரிசனம், நண்பர்கள் உறவு,

**மீனம்** :- எடுத்த காரியம் வெற்றியடைதல், மரியாதை பொது சேவையில் மதிப்பு, வெளியூர் பயணம்.

## யாழ்.குடாநாடு எங்கிலும்...

நான்கு வீதிகளிலும் முட்கம்பிகளையும், தகரங்களையும், கற்களையும், மரங்களையும் கொண்டு வீதித்தடைகள் போடப்பட்டிருந்தன. இப்பகுதியில் இராணுவக் காவல் அரண் இருந்த போதிலும் வீதித் தடைகள் பலமாக போடப்பட்டிருந்தன.

கோண்டாவில் சந்திப் பகுதியிலும், திருநெல்வேலி சந்தி, இராச பாதைச் சந்தி, புன்னாலைக் கட்டுவன் சந்தி, கோப்பாய் சந்தி, போன்ற பகுதிகளிலும் வீதிகளின் குறுக்காக [illegible]களைப் போட்டு எரித்து வீதித் தடைகள் இடப்பட்டிருந்தது.

[illegible] இதேவேளை மானிப்பாய் சந்தையடியில் பிரதான வீதியின் குறுக்காகவும் தீ மூட்டப்பட்டு வீதித்தடை போடப்பட்டிருந்தது.

இவற்றை விட வடமராட்சிப் பகுதியின் பல பகுதிகளிலும் வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு அண்மையிலும், பருத்தித்துறையிலும் பிரதான வீதிகளின் குறுக்காக பெரிய கற்களையும் மின் கம்பங்களையும் பயன்படுத்தி வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன.

மேலும் தென்மராட்சியின் பல பகுதிகளில் கண்டி வீதியின் குறுக்காக பலமான வீதித் தடைகள் இடப்பட்டு வீதி மறிப்புப் போராட்டம் செய்யப்பட்டது. இதே போன்று தீவகப் பகுதியிலும் பல்வேறு இடங்களிலும் பிரதான வீதிகள் பொதுமக்களால் தடை செய்யப்பட்டு மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ். கண்டி வீதியின் சில பகுதிகளில் மரக்குற்றிகள் குறுக்காகப் போடப்பட்டிருந்தன.

நேற்றைய தினம் யாழ்.அரச செயலகம் உட்பட அனைத்து அரச, அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள் அனைத்திலும் அவற்றின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. வீதிப் போக்குவரத்துக்கள், அரச, தனியார் போக்குவரத்துச் சேவைகள் என்பனவும் நடைபெறவில்லை. இதனால் யாழ். நகரம் வெறிச்சோடிக காணப்பட்டது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆங்காங்கே சென்று நிலைமைகளை அவதானித்துச் சென்றனர்.

நேற்றைய முக்கிய அம்சமாக படையினரின் வாகன நடமாட்டம் மிகக் குறைவாகவே காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வடமராட்சிப் பகுதியிலும் படையினர் முகாம்களிலேயே முடங்கிக் கிடந்தனர்.

(க,51,25,42,82,15,84,62,46,100)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



அண்மையில் வன்னிக்கு வந்த ஜப்பானிய உயர் மட்டத் தூதுக்குழு புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்த போது எடுக்கப்பட்ட படம் நன்றி - தமிழ் நெற்

## பொதுமக்களின் கடும் எதிர்ப்பின் மத்தியில் பலாலியைச் சூழ பாதுகாப்பு அரண்கள் பலப்படுத்துவதில் படையினர் மும்முரம்

(புன்னாலைக்கட்டுவன்)

பலாலி இராணுவத்தளத்தின் தென்பகுதி பாதுகாப்பு முன்னரங்கு படையினரால் விஸ்தரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு வருகிறது. படையினரின் இம்முயற்சிக்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் இந்நடவடிக்கை தொடர்ந்து படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இராணுவத்தினர் புல்டோஸர் சகிதம் புன்னாலைக் கட்டுவன் வடக்கு, குப்பிளான் வடக்கு பகுதிகளில் நேற்று இந்த அரண் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன்போது புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியிலிருந்து குப்பிளான் சந்தியை நோக்கி அரணை விஸ்தரிக்க இராணுவம் எடுத்த முயற்சி பொதுமக்களின் கடும் எதிர்ப்பையடுத்து கைவிடப் பட்டது.

குரும்பசிட்டி அம்மன் கோயில் வரை பின் சென்ற படையினர் அங்கிருந்து, குப்பிளான் சந்தியிலிருந்து குரும்பசிட்டி சந்திக்கு செல்லும் வீதியின் மேற்குப் புறத்தில் தமது துப்பரவுப் பணிகளை மேற்கொண்டனர். இப் பகுதியினுள் அடங்கும் பயன்தரும் பல மரங்கள் அழிக்கப்பட்டதுடன் பல தோட்ட நிலங்களும் சுவீகரிக்கப்பட்டுள்ளன. வீதியின் கிழக்கு புறத்தையும் தாம் சுவீகரிக்கவுள்ளதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலைமைகளை அறிந்து இப் பகுதிக்கு சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் இப் பகுதி மக்களிடம் நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

இராணுவத்தினர் சுவீகரித்து துப்பரவு செய்த பகுதியில் சிவப்பு நிற முக்கோணவடிவத் தகரங்கள் நாட்டப்பட்டுள்ளன. இப்பகுதியில் பாதுகாப்பு மண் அரண் அமைக்கும் முன்னோடி முயற்சியாக இது இருக்கலாம் எனக்கருதப்படுகிறது.

இப்பகுதியில் தற்போது மக்கள் மீளக்குடியேறி வரும் நிலையில், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் சொந்த இடத்தில் மீள இயங்கவுள்ள நிலையில் படையினரின் இத்தகைய நடவடிக்கையினால் மக்களிடையே அச்சநிலை ஏற்பட்டுள்ளது. (83,96)

## சமாதான முயற்சிகள் எவ்வகையிலும் குழம்பாது

### பிரதமரின் செயலர் பிரட்மன் அறிவிப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை குழப்ப பெருமுயற்சி செய்யப்படுகின்ற போதும் சமாதான நடவடிக்கை எவ்வகையிலும் குழம்பமாட்டாது என பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் செய்ய சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அரசும்-புலிகளும் புத்தி சாதுரியமாக செயற்பட்டு சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை இத்தகைய குழப்ப முயற்சிகள் சமாதான நடவடிக்கையின்போது தோன்றும் என நாம் முன்பே எதிர்பார்த்திருந்தோம் எனவும் பிரட்மன் வீரக்கோன் குறிப்பிட்டார்.

## வர்த்தக நிறுவனங்களை இன்று திறக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இன்றையதினம் விடுமுறை நாளாக இருந்த போதிலும் யாழ். மாவட்டத்தில் உள்ள வர்த்தக மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் தமது வழமையான சேவையை பொதுமக்களுக்கு வழங்க முன்வரும்படி கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

யாழ் மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் நேற்று மாலை வெளியிட்ட செய்திக்குறிப்பொன்றில் மேற்படி கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது. பொதுமக்களின் நன்மை கருதியே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

## வவுனியாவில் படையினர் முகாம்களுக்குள் முடக்கம்

(வவுனியா)

கிழக்கில் நடைபெற்ற படுகொலைகளைக் கண்டித்து வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஹர்த்தால் அனுஷ்டிப்பு மற்றும் கண்டன நடவடிக்கைகளையடுத்து இராணுவத்தினர் தமது முகாம்களுக்குள் முற்றுமுழுதாக முடங்கிக்கொண்டனர்.

நேற்றுக் காலைமுதல் ஆரம்பமாகிய வீதி மறிப்பு மற்றும் மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து அனைத்து இராணுவத்தினரும் தமது முகாம்களுக்குச் சென்று விட்டனர். வீதியில் இராணுவத்தினர் எவரும் நடமாடவில்லை. அனேகமான இடங்களில் பொலிஸாரே காணப்பட்டனர்.

இதேவேளை நேற்று முன்தினம் மாலையே வவுனியா மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்தின விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியல் பொறுப்பாளர் எழிலனுடன் தொடர்பு கொண்டு நேற்றைய ஆர்ப்பாட்டம் குறித்து வினவியுள்ளார். மக்களின் எதிர்ப்புப் போராட்டத்துக்கு படையினரின் நடமாட்டம் தடையாக இருந்தால் அதைத் தான் தடுப்பதற்காக படைகளை முகாம்களுக்குள் தங்கியிருக்குமாறு கட்டளையிடுவதாகவும் தெரிவித்தார். இவ் விடயம் குறித்து அவர் மூன்று தடவைகள தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும் தெரிய வருகிறது.

## நெடுந்தீவு பயணிகள் படகை அலைக்கழித்த படையினர்

நேற்றைய தினம் நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவானுக்கு அவசர தேவைகளின் நிமித்தம் படகில் வந்த பயணிகள் கடற்படையினரால் உடனடியாகத் திருப்பி நயினாதீவுக்கு அனுப்பப்பட்டனர். எனினும் நயினாதீவில் நின்ற கடற்படையினர் அவர்களை மீண்டும் குறிகாட்டுவானுக்கே திருப்பி அனுப்பினர். குறிகாட்டுவானில் நின்ற படையிடனர் படகினை திரும்பவும் நெடுந்தீவுக்குச் செல்லுமாறு பணித்ததை தொடர்ந்து பயணிகளுடன் படகு மீண்டும் நெடுந்தீவை சென்றடைந்தது. குமுதினிப்படகு இல்லாத நிலையில் கொழுத்தும் வெயிலில் பயணிகள் சுமார் ஐந்து மணிநேரம் கூடாரமற்ற படகில் கடலில் சென்றதால் பலத்த சிரமங்களை எதிர் நோக்கினர்

(112)

### வீதி விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை நடைபெற்ற வீதி விபத்தில் காயமடைந்த நிலையில் யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட அல்லைப்பிட்டியைச் சேர்ந்த ஜெ.பிரதீபன் (வயது-20)என்பவர் மரணமடைந்துள்ளார்.

### காஞ்சிரங்குடா...

யங்கள் அவர்களுடைய மனங்களில் சந்தேகங்களையும் குழப்பங்களையும் விதைத்துக்கொண்டிருக்கின்றன. எவ்வாறாயினும் எங்களுடைய தேசியத் தலைவரின் பணிப்புரைகளுக்கு இணங்க, நாங்கள் மிகுந்த நிதானத்துடன் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகிறோம். என்றும் கேணல் கருணா தெரிவித்தார்.

கேணல் கருணா, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புரூவ் ஹொவ்டேயை வெள்ளிக்கிழமை இரவு சந்தித்து கலந்துரையாடினார்.

'அம்பாறையிலுள்ள விசேட அதிரடிப்படையினர் அடிக்கடி போர் நிறுத்தத்தை வன்செயல்களால் மீறுகிறார்கள். இலங்கையின் தென்கிழக்கு கரையோரப் பகுதிகளில் தமிழர்கள் மீது ஏராளமான மனித உரிமைமீறல்களையும் வன்செயல்களையும் நடத்தி வருகிறார்கள். காஞ்சிரகுடாவில் அப்பாவிப் பொதுமக்களைத் தாக்கிக் கொன்றமைக்கு பொறுப்பான விசேட அதிரடிப்படை உறுப்பினர்களுக்கு எதிராக உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்' என்றும் கேணல் கருணா போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு கூறினார்.

பொதுமக்கள் மீதும் விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள் மீதும் பிடிவாதமான முறையில் அவதூறுகளையும் துன்புறுத்தல்களையும் மேற்கொண்டதன் காரணமாக மக்களின் உணர்வெழுச்சி அதிகரித்தமையை சுட்டிக்காட்டிய கேணல் கருணா, காஞ்சிரங்குடாவிலுள்ள விசேட அதிரடிப்படை முகாம் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மட்டக்களப்பு -அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் இந்தச் சந்திப்பில் கருணாவுடன் இணைந்து கொண்டார்.

MURTHY
ADVERTISING SERVICE
2789

யாழ். FM ல் விளம்பரம் செய்திட
யாழ் - கொழும்பு பிரயாண ஒழுங்கு செய்திட
ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு ஆட்டோ அமர்த்திட

மூர்த்தி
விளம்பர சேவை,
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
போன்:2789
(007)

## கோதுமை மாவின் விலை மூன்று ரூபாவால் உயரும்

(கொழும்பு நிருபர்)

கோதுமை மாவின் விலை மூன்று ரூபாவினால் உயர்த்தப்படலாம் எனப் பிறிமா நிறுவனம் அறிவித்துள்ளது. கோதுமைக்கு உலகச் சந்தையில் நிலவும் போக்குக்கு அமைவாகவே இந்த விலை உயர்வு இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாளொன்றுக்கு 55 ஆயிரம் மெ.தொன் கோதுமை மா இலங்கை மக்களால் பயன்படுத்தப்படுகின்றது சர்வதேச சந்தையில் கோதுமைக்கு எழுந்துள்ள கேள்வியால் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. இதனால் உள்ளூரில் கோதுமை மாவின் விலையை மூன்று ரூபாவினால் உயர்த்த வேண்டிய நிலை ஏற்படலாம் எனப் பிறிமா நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை கோதுமை மாவின் விலை மூன்று ரூபாவினால் உயர்த்தப்பட்டால் பாணின் விலையையும் 3ரூபாவால் உயர்த்த நேரிடும் என பேக்கரி உரிமையாள சங்கத் தலைவர் கூறியுள்ளார்.

### நயினாதீவு...

போராளிகள் தொடர்ந்து செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டனர். இதன் பின்னர் போராளிகள் தமது பயணத்தை தொடர முடியும் என கண்காணிப்புக்குழுவினர் அறிவித்தனர்.

இதையடுத்து அரசியல் துறையினர் தமது பயணத்தை தொடர்வதற்காக மீண்டும் நயினாதீவு இறங்குதுறைக்கு வந்த போது மீண்டும கடற்படையினரால் வழி மறிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டனர். தமக்கு எதுவித மேலிட உத்தரவும் கிடைக்கவில்லை என கடற்படைத் தரப்பில் கூறப்பட்டது. இதனால் அரசியல் துறையைச் சேர்ந்த அப்போராளிகள தொடர்ந்து நயினாதீவில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

### தாக்குதல்களுக்கு...

திலக் கருத்துத் தெரிவிக்கையில்- வெள்ளிக்கிழமை திருகோணமலையில் ஹர்த்தாலின் போது நடைபெற்ற குண்டுத் தாக்குதலிலும், துப்பாக்கி பிரயோகத்திலும் பொலிஸாரும், ஊர்காவல் படையினருமே சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள். பின்னணியில் இராணுவத்தினர் காணப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களும், மறியலில் ஈடுபட்டவர்களும் பொலிஸாரையும், ஊர்காவல் படையினரையும் அடையாளம் காட்டுவதற்குத் தயாராக இருக்கின்றார்கள்.

இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விசாரணைகள் ஏமாற்றுவித்தையாக இருக்கக் கூடாது. இலங்கை வரலாற்றில் விசாரணைக் கமிசன்கள் அமைக்கப்படுவது வழக்கம். ஆனால் அவை காலதாமதமாகி விடுவதால் எவ்வித பிரயோசனமும் அற்றதாகப் போய் விடுகின்றது. இவ் விசாரணையும் அவ்வாறாக இருக்கக்கூடாது. எனவும் கேட்டுள்ளேன் என்றார். மேலும் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்கள் மக்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதில் ஈடுபட்ட பொலிஸாரதும், ஊர்காவல் படையினரதும் பெயர்கள் அடங்கிய பட்டியல் கையளிக்கப் பட்டுள்ளது.

இனிமேல் வடக்கு- கிழக்குப் பகுதியில் இவ்வாறான சமபவங்கள் இடம் பெறாது எனவும், இதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் தான் எடுப்பதாகவும் கண்காணிப்புக் குழுத்தலைவர் தன்னிடம் தெரிவித்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரின் ஓர் கண்டன அறிக்கையும் கண்காணிப்புக் குழு தலைவர் ஹொவ்டேயிடம் கையளிக்கப்பட்டது . பொருத்தமான நடவடிக்கைகள் அரச தரப்பில் எடுக்கத் தவறினால் அது அமைதி முயற்சிக்கு பெரிய அடியை கொடுப்பதாகவே அமைந்து விடும் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை- நேற்று சனிக்கிழமை காலை திருகோணமலை பிளான்டன் பொயின்ற் இராணுவ முகாமில் முப்படைகளின் தளபதிகள் பொலிஸமா அதிபர் அடங்கலானபாதுகாப்பு கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசிய திருமலை அரசியல்துறை பொறுப்பாளர் திலக், தொடர்ந்து தமிழர்கள மீது தாக்குதல் நடத்துவதை அனுமதிக்க முடியாது. இதுவரை திருகோணமலையில் 22 போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக் காட்டினார். இனிவரும் காலங்களில் வாரம் தோறும் புலிகள்,இராணுவம், கடற்படை, பொலிஸ் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் சந்திப்பை நடாத்தவேண்டும் எனவும் இக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது

பாராட்டி வாழ்த்துகிறோம்



இன்று ஞாயிற்றுக்கிழமை (13-10-2002) யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் Dip.in.Education பட்டத்தைப் பெறும் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி தயாமதி ரஜீந்திரன அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

குடும்பத்தினர்.

(012)

இப்பத்திரிகை- இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.